Registered as a Newspaper

பக்கங்கள் 16+5+III

விலை ரூ. 60

# உதயன்

சுடர் : 38
கதிர் : 358

ஞாயிற்றுக்கிழமை 19 நவம்பர் 2023

கார்த்திகை 03 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# வெளிநாட்டு ஆசைகாட்டி கோடிகளில் பண மோசடி



## யாழ்ப்பாணத்தில் பலரிடம் 'அபேஸ்'

யாழ்ப்பாணம், நவம்பர் 19

வெளிநாடுகளுக்குச் செல்வதற்காகப் பணம் கொடுத்து ஏமாறும் சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் அண்மைய நாள்களில் வெகுவாக அதிகரித்துள்ளன. இது தொடர்பில் பொதுமக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் என்று யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் விஷாந்த தெரிவித்துள்ளார். »15

# மார்கழி இசை விழாவும் விற்பனைக் கண்காட்சியும்

விரிவு :- பக். 15

## செயற்கை நுண்ணறிவு மூலம் துவாரகாவின் காணொலியை வெளியிடுவதற்கு முயற்சி

கொழும்பு, நவ. 19

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகள் துவாரகாவின் படத்தை உருவாக்கி அதனை மாவீரர் »15

## பொன்னாலையில் முண்டம் மீட்பு!

யாழ்ப்பாணம், நவ. 19

தலையில்லாத ஆணின் சடலம் ஒன்று நேற்று மாலை பொன்னாலையில் மீட்கப்பட்டுள்ளதாக வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரி »15

## வவுனியா விபத்தில் இருவர் உயிரிழப்பு

வவுனியா, நவ. 19

ஏ - 9 வீதி சாந்தசோலைச் சந்தியில் நேற்று பி.ப. 2 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் கிளி »15




செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
முற்பணம்
125,000/=
வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
அதிகபட்ச இரகசியத்தன்மை
சிநேகபூர்வமான உடனடி சேவை
சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
செலான் வங்கி

## மழைக்கான வாய்ப்புண்டு

யாழ்., நவ. 19

முல்லைத்தீவுக்கு தெற்காக காற்றுச் சுழற்சி உருவாகியுள்ளதால் நாளைமறுதினம் 21 ஆம் திகதி வரை »15



அசோக் TMT
அதிகூடிய பலம் வாய்ந்த கம்பிகள்

யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு, பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கும், வீடுகளுக்கும், சந்தையில் உங்களுக்கு மிக அருகாமையில் இலகுவாக கிடைக்கக்கூடிய அதிகூடிய பலம் வாய்ந்த அசோக் TMT கம்பிகளை பயன்படுத்தி முறுக்குக் கம்பி பெறுமதியிலும் பார்க்க 15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.

பலம் வாய்ந்த கட்டுமானத்திற்கு - அசோக் TMT

SLS 375

ashok STEEL
நீடித்த வலிமை

மத்திய மாகாணம் - 0773825832
வட மேல் மாகாணம் - 0773455128
மேல் / தென் மாகாணம் - 0766773659
கிழக்கு மாகாணம் - 0743712824
வடக்கு மாகாணம் - 0773781397
உடனடி அழைப்புகள் - 011 7388940-3

ஒரு மெட்ரிக் தொன் தலா ரூ. 275,000 + VAT

அறிமுகமாகிறது
Dialog MyOffers
உங்களுக்கேற்ற Offers கிடைக்கும் ஒரே இடம்!
Bonus Reload
மேலதிக Wi-Fi Data
மேலதிக Data
மேலதிக Calls
மேலதிக TV Channels
மேலதிக SMS
அருகிலுள்ள விற்பனை முகவர் மூலமாக அல்லது MyDialog App ஊடாக MyOffers ஐ செயற்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐ.எம்.எப். இரண்டாம் தவணை டிசெம்பர் மாதத்துக்குள் கிட்டும்

## அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

**கொழும்பு, நவ.19**
**சர்வதேச நாணயநிதியத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்ட நீடிக்கப்பட்ட கடன் உதவியின் கீழ் இரண்டாவது தவணை டிசெம்பர் மாதத்துக்குள் விடுவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமானசேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது-
குறுகியகால இலாப நோக்கம் இன்றி,வீழ்ச்சியடைந்துள்ள தேசியப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான நீண்ட கால வேலைத்திட்டத்தின் மேலும் ஒரு ஆரம்பத்தையே இந்த முறை முன்வைக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டம் எடுத்துக்காட்டுகின்றது.

நாட்டைக் கட்டியெழுப்பும் பயணத்தில் முன்னோக்கிச் செல்லும்போது பெரிய அளவில் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவது குறித்து எதிர்பார்க்கமுடியாது. ஆனால் அவர் நிவாரணங்களையும் வழங்கியுள்ளார். தேசியப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்தையும் செயற்படுத்தினார்.

அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு, முதியோர் மற்றும் அங்கவீனர் கொடுப்பனவு உயர்வு உட்பட கல்வி, சுகாதாரம், பிரதேச அபிவிருத்தி மற்றும் காணி உரிமைகள் உள்ளிட்ட பல்வேறு நிவாரணங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் வழங்க அரசாங்கத்துக்கு வருமானம் தேவை. அரசாங்கம் பெரும்பாலும் வரி வருமானத்தில் இருந்துதான் இவ்வாறான நிவாரணக் கொடுப்பனவுகளை மேற்கொள்கின்றன.

நாம் வரவு-செலவு என்ற இரண்டிலும் சமநிலையைப் பேண வேண்டும். அதிகமான நிவாரணங்களை வழங்க வேண்டுமாயின் வரி விதிப்புகளை உயர்த்த வேண்டியேற்படும்.

நாம் குறித்த நேரத்தில் சர்வதேச நாணயநிதியத்துக்குச் செல்லாமையே இந்த அனைத்து பொருளாதார நெருக்கடிகளுக்கும் காரணம் என்று எதிர்த்தரப்பினர் கூறினர். அவ்வாறு செல்லும்போது முக்கியமாக அவர்கள் இடும் நிபந்தனைகளை நாம் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டியேற்படும்.

சர்வதேச நாணயநிதியத்தின் இரண்டாம் தவணையும் மிக விரைவில் எமக்குக் கிடைக்கவுள்ளது. எதிர்வரும் டிசெம்பர் மாதமளவில் அது எமக்குக் கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கின்றேன். சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் எமக்குக் கிடைக்கும் தொகையை விட அதன் ஊடாக ஏனைய கடன் வழங்குநர்களுக்கு எம்மீது ஏற்படும் நம்பிக்கையே எமக்கு மிக முக்கியம்.

வட்டி வீதங்கள் குறைந்துள்ளன. அந்நியச் செலாவணிக் கையிருப்பு உயர்வடைந்துள்ளது. எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடுகள் தற்போது இல்லை. நாம் தற்போது பெரும் சவால்களை எதிர்கொண்டு அதில் இருந்து மீள்வதற்காகச் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றோம் என்பதை அனைவரும் நினைவில் கொள்ளவேண்டும் - என்றார் . (எ-44)

## ஆரம்ப வகுப்பிலிருந்தே இனிமேல் பாலியல் கல்வி

### புதிய கல்வித் திட்டத்தில் நடவடிக்கை

கொழும்பு, நவ.19
புதிய கல்வித் திட்டத்தின் கீழ் ஆரம்ப வகுப்பிலிருந்தே பாலியல் கல்வியைப் போதிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று சிறுவர் விவகாரங்களுக்கான நாடாளுமன்ற குழுத் தலைவர் ரோகிணி குமாரி விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

சிறுவர்களுக்கு உரிய முறையில் பாலியல் கல்வியை ஊட்டுவதன் மூலம் சிறுவர் துஷ்பிரயோகங்களைக் குறைக்கலாம் எனவும்,புதிய பாலியல் கல்வித் திட்டத்தின் ஊடாக கூட்டுப்பொறுப்புடன் சிறுவர்களைப் பாதுகாக்க வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
பாலியல் கல்வி போதிக்கும் யோசனை தொடர்பான கலந்துரையாடல் நாடாளுமன்ற குழுக்கூட்டத்தில் இடம்பெற்றது. அந்தக் கூட்டத்தில் பாலியல் கல்வி போதிக்கும் யோசனை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இலங்கை சிறுவர்களைப் பாதுகாப்பதில் தொடர்ச்சியாக அக்கறை செலுத்தி வருகிறது. பாலியல் கல்வி போதிக்கும் யோசனை முக்கியமான ஒரு விடயம் - என்றார். (எ-6)

## உணவூட்டும் திட்டத்துக்கு அமெரிக்கா நிதி உதவி!

கொழும்பு, நவ.19
பாடசாலை மாணவர்களுக்கு உணவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்துக்கு 32.5 மில்லியன் டொலரை அமெரிக்கா அன்பளிப்புச் செய்துள்ளது. சிறுவர் நிதியத்தின் ஊடாக இந்த நிதி வழங்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் எட்டு மாவட்டங்களைச்சேர்ந்த இரண்டு இலட்சம் மாணவர்களுக்கு அடுத்த ஐந்து வருடங்களுக்கு சத்துணவு வழங்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, நுவரெலியா, பதுளை, கொழும்பு, திருகோணமலை, மொனராகலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்கள் இந்தத் திட்டத்தின்கீழ் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இந்த மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களின் திறன் விருத்திக்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. (எ-6)

## புதிய தூதுவர்கள் நால்வர் நியமனம்

கொழும்பு, நவ.19
நான்கு புதிய தூதுவர்கள் நேற்றுமுன்தினம் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராக கேஷங்க செனிவிரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தாய்லாந்து, கம்போடியா, பிரிட்டன் போன்ற நாடுகளுக்கான இலங்கைத் தூதுவராகவும் நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. அலுவலகத்துக்கான நிரந்தரப் பிரதிநிதியாகவும் கடமையாற்றியுள்ளார்.

கோப் குழுவின் முன்னாள் தலைவரும், முன்னாள் கைத்தொழில் அமைச்சரும், விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுக் குழுவில் அரச சார்பில் பங்குபற்றியவருமான ரோகித போகொல்லாகம பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க சிங்கப்பூருக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். மருத்துவர் வீரசேன ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் பெல்ஜியத்துக்குமானதூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். (எ-6)

## கோப் குழுவின் செயற்பாடுகள் மறுஅறிவித்தல்வரை நிறுத்தம்

கொழும்பு, நவ.19
கோப் குழு மறுஅறிவித்தல்வரை தனது செயற்பாடுகளை இடைநிறுத்தியுள்ளது.

'கோப்' குழுவின் தலைவர் ரஞ்சித் பண்டார பதவி விலகவேண்டும் என எதிரணிகள் வலியுறுத்திவரும் நிலையில், மறுஅறிவித்தல் விடுக்கப்படும்வரை 'கோப்' குழுக் கூட்டம் நடைபெறாது என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் தலைமையில் கூடியது. அப்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

தற்போதைய கோப் குழுவின் தலைவர் பதவி விலக வேண்டும் எனவும், அவ்வாறு இல்லாவிட்டால் கோப் குழுக் கூட்டம் பயனற்றதாகவே அமையும் என எதிரணிகள் சுட்டிக்காட்டியுள் ளன.

அதேவேளை, கிரிக்கெட் ஊழல் தொடர்பான விசாரணைகள் கோப் குழுவால் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தநிலையில் கிரிக்கெட்சபை தலைவரின் மகன் கோப் குழுவின் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளமைக்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாகப் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில் கோப் குழுவின் தலைவர் ரஞ்சித் பண்டார," தனது மகனான கனிஷ்க பண்டாரவே தனது ஒழுங்குபடுத்தல் செயலாளராக கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல் கடமையாற்றுகின்றார்" என்று தெரிவித்துள்ளார்.

இந்த நியமனம் நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்று எனவும் அவர் விளக்கமளித்துள்ளார். (எ-44-6)

## ஜெரோமைக் கைதுசெய்ய தடை விதித்தது நீதிமன்றம்

கொழும்பு, நவ.19
புத்த மதம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்து சர்ச்சையில் சிக்கிய மதபோதகர் ஜெரோமை விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்ய வேண்டாம் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு அறிவித்துள்ளது.

கிறிஸ்தவ மதபோதகரான ஜெரோம் புத்தரைப்பற்றி தெரிவித்த கருத்துகள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தன. அதையடுத்து ஜெரோம் வெளிநாட்டுக்கு தப்பியோடியிருந்தார். தற்போது போதகர் ஜெரோம் நாடு திரும்பவுள்ள நிலையில் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. போதகர் ஜெரோமுக்கு வாக்குமூலம் வழங்குவதற்கு 48 மணித்தியால கால அவகாசம் வாழங்கவேண்டும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (எ-6)

## 10 மில்லியன் சட்டவிரோத சிகரெட்டுகள் மீட்பு



கொழும்பு, நவ.19
சட்டவிரோதமாக எடுத்துவரப்பட்ட (இறக்குமதி செய்யப்பட்ட) பத்து மில்லியன் சிகரெட்டுகளை கிராண்ட்பாஸ் பகுதியிலிருந்து விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர். நாற்பது கொள்கலன்களில் எடுத்துவரப்பட்ட இந்த சிகரெட்டுகளின் பெறுமதி ஆயிரத்து 300 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. கிராண்ட்பாஸ் பொலிஸார் இது தொடர்பான விசாரண்ணகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீர் வளத்தை விற்கவும் முயற்சிக்கிறார் ரணில்

## குற்றஞ்சாட்டுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, நவ.19

**காணி மற்றும் அரச கட்டடங்களுக்கு விலை பேசி முடிந்த நிலையில் விற்பதற்கு ஏதும் இல்லாததால் தற்போது நாட்டின் நீர் வளத்துக்கும் விலை பேசப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த மக்களையும் சோமாலியாவுக்குள் தள்ளும் முன்மொழிவுகளை ஜனாதிபதி முன்வைத்துள்ளார். ஊழல்வாதிகளுக்கு மீண்டும் வரிச்சலுகை வழங்கப்பட்டுள்ளது.**

- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நாங்கள் தெரிவு செய்தோம். அவர் எமது கொள்கைக்கு அமையச் செயற்படவேண்டும் என சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் கூறுகின்றனர்.

வரி விதித்தல், அரச நிறுவனங்கள் மறுசீரமைப்பு மற்றும் விற்பனை செய்தல், கடன் மறுசீரமைப்பு, எரிபொருள் விலையேற்றம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆகிய நிபந்தனைகளை சர்வதேச நாணயநிதியம் முன்வைத்துள்ளது. இந்த நிபந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நட்டமடையும் அரச நிறுவனங்கள் சீரமைக்கப்படுகின்றன என்று குறிப்பிட்டுக்கொண்டு இலாபமடையும் சிறிலங்கா ரெலிக்கொம், காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆகிய அரச நிறுவனங்களை விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரச நிறுவனங்களை விற்க இடமளிக்கமுடியாது என பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் கூச்சலிடுகிறார்கள். ஆனால் விற்பனைக்கான சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நிலம், அரச கட்டடங்களுக்கு விலைபேசியுள்ள நிலையில் விற்பதற்கு ஏதும் இல்லாத காரணத்தால் தற்போது நாட்டின் நீர்வளத்தையும் விற்பனை செய்வதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். 'நீர் சந்தை முகாமைத்துவம்' என்று குறிப்பிட்டுக் கொண்டு நீர்வளத்தை விற்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இந்த யோசனை ஒன்றும் புதிதல்ல, முன்னாள் அமைச்சர் சரத் அமுனுகம நீர்ப்பாசனத்துறை அமைச்சராகப் பதவி வகித்தபோது இதே யோசனை கொண்டு வரப்பட்டு, விவசாயிகள் மத்தியில் இருந்து எழுந்த போராட்டத்தால் அந்த யோசனை பிற்போடப்பட்டது. பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் தற்போது மீண்டும் அந்த யோசனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது - என்றார். (எ-இ)

# சம்பள அதிகரிப்புச் செய்வது மக்களுக்குத் தீர்வளிக்காது!

## பொதுநிர்வாக இராஜாங்க அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, நவ.19

நாட்டு மக்களுக்கு சுமுகமான சூழலொன்றை உருவாக்குவதற்கு சம்பள அதிகரிப்பால் மாத்திரம் தீர்வு காணமுடியாது. உற்பத்திகளை அதிகரித்தல், பொருள்களின் விலைகளை குறைத்தல் ஆகியவற்றினூடாக நாட்டு மக்களுக்கு சுமுகமான சூழலொன்றை உருவாக்குவதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கமாகும்.

- இவ்வாறு ஜனாதிபதி ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பொதுநிர்வாக இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் புதிய வருமான வழிமுறைகளை உருவாக்கவேண்டும். கல்வித் திட்டத்தை விஸ்தரிக்கும் நோக்கில் 4 புதிய பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அத்தோடு தடைப்பட்டுக் கிடக்கும் வீதி நிர்மாணப் பணிகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இருப்பினும் அனைவரும் கோருகின்ற சம்பள அதிகரிப்பால் மாத்திரம் பிரச்சினைகளைத் தீர்த்துவிட முடியாது. அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்கு மேலதிகமாக நாட்டின் ஏனைய மக்களுக்கும் நிவாரணம் கிடைக்கவேண்டும். அரசாங்கத்தை வழிநடத்திச் செல்வது கனவு காண்பதைப் போன்று இலகுவான விடயமல்ல என்பதை எதிர்க்கட்சியில் இருப்போர் உணரவேண்டும்- என்றார். (ச-44)

# கோப் குழு தலைவராக ரஞ்சித் தகுதியற்றவர்!

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, நவ.19

கோப் குழுவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார, சிறிலங்கா கிரிக்கெட் சபையின் வேலைத்திட்டமொன்றில் ஆலோசகராகப் பணியாற்றியுள்ள நிலையில் சிறிலங்கா கிரிக்கெட்சபை தொடர்பான விசாரணையின்போது அவர் எவ்வாறு கோப் குழுவின் தலைவராகச் செயற்படமுடியும் - இவ்வாறு நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் கேள்வியெழுப்பியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

அவர் மேலும் கூறியதாவது:-

கோப் குழுவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார, கண்டி கிரிக்கெட் கம்பஸ் திட்டத்தின் ஆலோசகராக பணியாற்றியுள்ளார். எந்த ஒரு ஜனநாயக நாட்டிலும் நாடாளுமன்றத்தில் இதுபோன்ற முரண்பாடுகள் ஏற்படும்போது, நாடாளுமன்றக் குழுக்களில் பதவி வகிக்கமுடியாது, இது இவ்வாறு இருக்கும்போது அவர் எவ்வாறு கோப் குழுவின் தலைவராகச் செயற்பட முடியும்?

இங்கு சட்டம் மீறப்பட்டுள்ளது. பேராசிரியர் ரஞ்சித் பண்டார கோப் குழுவின் தலைவராக அமர்வதற்கு தார்மீக உரிமையற்றவர் - என்றார். (ச-44)

# குற்றவாளிகளை இணங்கண்டபின் இனி விசாரிப்பதற்கு எதற்குக் குழு?

## கேள்வி எழுப்பியது ஜே.வி.பி.

கொழும்பு, நவ.19



நாட்டின்வங்குரோத்து நிலைக்கு - பொருளாதாரக் கொலைக்குக் காரணமானவர்கள் யாரென்பது தொடர்பில் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இனி பொருளாதார வீழ்ச்சி தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழு எதற்கு? - இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச உள்ளிட்ட பெரமுன அரசியல்வாதிகளே பொருளாதாரக் கொலையாளிகள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களின் தவறான தீர்மானங்களாலேயே பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றம் விரிவாக ஆராய்ந்த பின்னரே இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

முன்பதாக பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து தொடர்பில் ஆராய்வதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இனி அந்தத் தெரிவுக்குழு தேவையற்றது. அந்தத் தெரிவுக்குழுவின் பணியை நிறுத்தலாம்- என்றார். (ச-44)

# களனி திஸ்ஸ நிலையம் 6 வாரங்களுக்குப் பூட்டு!

பராமரிப்புப் பணிகளுக்காக களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி நிலையம் 6 வாரங்களுக்கு மூடப்பட்டுள்ளது என்று இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது.

165 மெகாவாட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி நிலையத்தின் எரிவாயு சுழலி ஆலை மற்றும் நீராவி சுழலி ஆலை என்பவற்றின் பராமரிப்புப் பணிகள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டாவது மின் உற்பத்தி இயந்திரம் திடீரெனச் செயலிழந்துள்ளது. இரண்டாவது மின் உற்பத்தி இயந்திரத்தில் உயர் அழுத்த ஹீட்டர் அமைப்பு திடீரெனச் செயலிழந்துள்ளது.

2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் செயலிழந்த நிலையில் இருந்த நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தின் 3 ஆம் அலகில், திட்டமிடப்பட்ட பெரும் சீரமைப்புப் பராமரிப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. தற்போது பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த மின் உற்பத்தி அலகு கூடிய விரைவில் தேசிய கட்டத்துடன் இணைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-இ)

# நீதிமன்றத் தீர்ப்பை வைத்து அரசியல் செய்யும் கட்சிகள்!

## பிரசன்ன ரணதுங்க கூறுகின்றார்

கொழும்பு, நவ.19

நீதிமன்றத் தீர்ப்பை வைத்து எதிர்க்கட்சி அரசியல் இலாபம் தேடவும் பிரச்சினைகளைத் திசை திருப்பவும் முயற்சித்து வருகிறது என்று ஆளும் கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இரண்டு வழக்குத் தீர்ப்புகள் தொடர்பாக எதிர்க்கட்சி இரண்டு விதமான கருத்துகளை முன்வைக்கின்றது. கிரிக்கெட் நிர்வாக சபை தொடர்பாக ஒரு விதமான கருத்தையும் பொருளாதாரம் தொடர்பான பிரச்சினையில் வேறு விதமாகவும் கருத்தையும் முன்வைத்து வருகின்றது. ஒருபுறம் நீதிமன்றத்தை விமர்சிக்கின்றனர். மற்றொரு புறம் அவர்களுக்கு வாய்ப்பான விடயங்கள் என வரும்போது அதில் குறுகிய இலாபத்தை அடையப்பார்க்கின்றனர் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் அரசின் 'பட்ஜெட்டை' எப்படி நம்பமுடியும்

## எதிர்கட்சித் தலைவர் கேள்வி



**கொழும்பு, நவ. 19**

**இந்த அரசாங்கத்தால் 2023 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட பட்ஜெட்டில் முன்மொழியப்பட்ட யோசனைகள் எவையும் முழுமையாக இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை. அந்தவகையில் 2024 ஆம் ஆண்டின் வரவு - செலவுத் திட்டத்தின் நடைமுறையில் நம்பிக்கை வைக்கமுடியாது.**

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

எந்தவொரு அரசும் முன்வைக்கும் நிதியொதுக்கீட்டுச் சட்டவரைவில் மாத்திரம் திருப்தியடைய முடியாது. அதில் குறிப்பிடப்படும் முன்மொழிவுகள் மற்றும் விடயங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்துக் காக தற்போதைய அரசால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் இன்றுவரையில் நிறைவேற்றப்படவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தின் ஆய்வுப் பிரிவின் பொருளாதார நிபுணர்கள் குழு இணைந்து, 2023 வரவு-செலவுத் திட்ட முன்மொழிவு களின் 77 அம்சங்கள் குறித்த பகுப்பாய்வின் பிரகாரம், 69 முன்மொழிவு களின் தகவல்கள் முழுமையடைய வில்லை.

அவற்றில்,12 முன்மொழிவுகளின் 17 வீத தகவல்கள் வெளியிடப்படவில்லை, 16 வீத வரவு -செலவுத் திட்ட முன்மொழிவுகள் ஆரம்பிக்கப்படவேயில்லை, 29 திட்டங்களின் முன்னேற்றம் 50 சதவீதத்துக்கும் குறைவாக உள்ளது, 12 திட்டங்களிலேயே முன்னேற்றம் 50 சதவீதத்துக்கும் அதிகமாகவுள்ளது.

வரவு - செலவுத் திட்டம் தொடர்பான தரவுகள் இன்மை 2017 ஆம் ஆண்டு 17 வீதமாகக் காணப்பட்டது, அதுவே 2023 ஆம் ஆண்டு 97 வீதமாகக் காணப் படுகிறது. இது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யார்?

2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட யோசனைகளுக்கு ஆதரவு வழங்குவதாயின் 2023 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் குறிப்பிட்ட விடயங்கள் பூர்த்தியாக்கப்படவேண்டும்- என்றார். (ச-44)






## 4 வர்த்தகர்களுக்குத் தண்டம்

பூநகரியில் காலாவதியான மற்றும் நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுப்பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த நான்கு வர்த்தகர்களுக்கு கிளிநொச்சி நீதிமன்றில் அண்மையில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

அத்துடன் ஒரு வர்த்தக நிலையத்துக்கு சீல் வைக்குமாறும் உத்தரவிடப்பட்டது. பூநகரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் நடத்திய பரிசோதனைகளின் போது காலாவதியான மற்றும் நுகர்வுக்குப் பொருத்தமற்ற பொருள்கள் விற்பனைக்கு வைத்திருந்தமைக்காக பூநகரி மற்றும் ஜெயபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள நான்கு வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டன. வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து தண்டம் விதிக்கப்பட்டது.

அத்துடன் ஒரு வர்த்தக நிலையத்தை 'சீல்' வைத்து மூடுமாறு உத்தரவிடப்பட்டது. (ஒ-9)



தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் அமரர்.இலகுநாதன் செந்தூரனின் அகவை நாள் நினைவாக கோப்பாய் மகிழடிப் பகுதி இளைஞர்களின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் கடந்த திங்கட் கிழமை செந்தூரனின் இல்லத்தில் நடைபெற்றது. (ச-66)



## குளவீதியை சீரமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

வவுனியா நகர மத்தியில் உள்ள குளவீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாமையால் வீதியில் பயணிக்கும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

வவுனியா மருத்துவமனை சுற்றுவட்டத்தில் இருந்து பிரிந்து செல்லும் இந்த வீதியில் உள்ள பெரும் பள்ளத்தில் வெள்ளநீர் தேங்கியிருப்பதால் வீதியில் பயணிக்க முடியாத நிலைமை தோன்றியுள்ளது என்று பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த வீதியைப் பெரும்பாலானோர் மருத்துவமனைக்கு வருவதற்கும், பாடசாலை மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதற்கும் பயன்படுத்துகின்றனர்.

இந்த வீதியைத் தற்காலிகமாகவேனும் சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-110)

# பிரிட்ஜ் செயற்றிட்டத்தில் இளைஞர்களையும் உள்வாங்குங்கள்

## கிளிநொச்சி மாவட்டச் செயலர் கோரிக்கை

கொடிகாமம், நவ. 19

பிரிட்ஜ் செயற்றிட்டத்தில் எதிர்காலத்தில் இளைஞர்களையும் இணைத்துக் கொள்ளவேண்டும். அவர்கள் தடம்மாறிச் செல்வதைத் தடுக்கவேண்டும்- இவ்வாறு கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, எங்களுடைய சமூகம் வளர்ந்த விதம் அதன் கட்டுப்பாடுகள் என்பனவற்றை இப்போதுள்ள இளம் சமூகம் மீறுகின்றது. இது மிகவும் கவலைக்குரியது. உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனையால் அவர்கள் சீரழிகின்றனர்.

இந்த பிரிட்ஜ் செயற்றிட்டமானது பெண்களை வலுப்படுத்தியிருக்கின்ற விதத்தைப்பார்க்கும்போது எதிர்காலத்தில் இந்தத் திட்டத்தில் இளைஞர்களையும் இணைப்பது சமுதாயத்தை நேர்வழிப் படுத்துவதற்கு வாய்ப்பாக இருக்கும். உள்ளூராட்சி மன்றங்களில் 25 சதவீதம் பெண்களின் பிரதிநிதித்துவம் வேண்டும் என்கின்றார்கள்.

ஆனால் அதற்குரிய வகையில் பெண்கள் தயாரப்படுத்தப்பட்டிருக்கின்றார்களா? என்றால் இல்லை. சட்டத்தால் எந்தப் பயனுமில்லை. அந்தச் சட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டும் என்றால் இவ்வாறு பெண்களை வலுப்படுத்தி அதற்குத் தயாரப்படுத்த வேண்டும் - என்றார். (ஒ-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் வெற்றிக்கான ஆரம்பப்புள்ளி 15 இல்

கொழும்பு, நவ.19

அடுத்த தேர்தலில் வெற்றிநடை போடுவதற்கான ஆரம்பப்புள்ளி எதிர்வரும் டிசெம்பர் 15 ஆம் திகதி வைக்கப்படும் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் விசேட சம்மேளனம் எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து சம்மேளனத்தில் முக்கியமான சில முடிவுகள் எடுக்கப்படவுள்ளன.

இந்நிலையிலேயே மஹிந்த ராஜபக்ச, கட்சி முக்கியஸ்தர்களிடம் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

கருத்து வேறுபாடுகளைக் களைந்துவிட்டு வெற்றி நோக்கிப் பயணிக்க மொட்டு அணியினர் ஒன்றுபடவேண்டும் எனவும் மஹிந்த அழைப்பு விடுத்துள்ளார். (எ-44)

## கைபேசிகள் திருட்டு சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், நவ.19

யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவுகளில் தொடர்ச்சியாக நடைபெற்று வந்த கைபேசித் திருட்டுச் சம்பவம் தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 8 கைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன என்றும் அவற்றின் பெறுமதி 4 இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 24, 31, 33 வயதுடையவர்கள் என்றும் வண்ணார்பண்ணை, பிரப்பங்குளம் வீதி மற்றும் ஓடை வீதியைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாக்காலி கால்நடைகள் அதிகரிக்கும் விபத்துகள்

வவுனியா, நவ.19

**வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்களில் காட்டாக்காலி கால்நடைகள் இரவு வேளைகளில் அலைந்து திரிவதால் வீதி விபத்துகள் அதிகரித்துள்ளன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.**

குறிப்பாக வவுனியா தெற்கு, பத்தினியார் மகிழங்குளம், மரக்காரம்பளை, சாஸ்திரி கூழாங்குளம், புதுக்குளம், ஈச்சங்குளம் மற்றும் கல்மடு பிரதேசங்களில் இரவு வேளைகளில் வாகனச் சாரதிகள் மற்றும் பாதசாரிகள் காட்டாக்காலி கால்நடைகளால் வீதி விபத்துகளைச் சந்திக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து வீதி விபத்துகளைத் தவிர்க்க வழி ஏற்படுத்தவேண்டும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர். (ச -75)



## தேசிய மட்டத்தில் நடனப்போட்டி சிவபூமி பாடசாலை சாதனை

யாழ்ப்பாணம், நவ. 19

இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடத்தப்பட்ட மாற்றுவலுவுடையோருக்கான நடனப்போட்டியில் கோண்டாவில் மனவிருத்திப் பாடசாலை தேசியத்தில் சாதனை படைத்துள்ளது.

இந்தப் பாடசாலையைச் சேர்ந்த அலெக்ஸ்சாண்டர் நிருசன்ராஜ் என்பவரே தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.


இதேவேளை கடந்த 2021ஆம் ஆண்டில் சிறந்த மனவிருத்திப் பாடசாலைக்கான தேசிய விருதை இந்தப் பாடசாலை வென்று வரலாற்றில் இடம்பிடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-66)

## வாசிப்பு மாத நிகழ்வும் பரிசளிப்பும் இன்று

யாழ்ப்பாணம், நவ. 19

யாழ். மாநகரசபை பொதுசன நூலகம் நடத்தும் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு, பரிசளிப்பு நிகழ்வு பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமைகாலை9மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்.மாநகரசபை ஆணையாளர்த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் விருந்தினர்களாக வடமாகாண ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன், யாழ். பொதுசன நூலகம் ஓய்வுநிலை நூலகர் செல்விந.ராகினி, யாழ்.மாநகரசபை பிரதம கணக்காளர் திருமதி.ம.வசந்தமாலா, யாழ்.மாநகரசபை பிரதம பொறியியலாளர் இ.சுரேஸ்குமார், யாழ்.மாநகரசபைச் செயலாளர் க.த.தயாளன், யாழ்.மாநகரசபை பிரதி ஆணையாளர் வே.ஆயகுலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ரி)



அனலைதீவு தெற்கு சங்கரநாதர் முருகமூர்த்தி சுவாமி கோயில் பெருந்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (ச-9)

## இளைஞர்களோடு இணைந்து பணியாற்ற விரும்புகின்றேன்

### ஆளுநர் சார்ள்ஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 19

இளைஞர்களின் கோரிக்கை தொடர்பில் ஆராய்வதோடு, அவர்களோடு இணைந்து பணியாற்ற விரும்புவதாக வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் தீபாவளி தினத்தன்று, இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட நிகழ்வில் கலந்துகொண்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் பல கோரிக்கைகள் ஆளுநரிடம் முன்வைக்கப்பட்டன.

அவற்றைப் பரிசீலித்து தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என ஆளுநர் குறிப்பிட்டார்.

இதேவேளை பொதுத்தேவைகள் தொடர்பில் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என வடமாகாண ஆளுநர் தெரிவித்தார்.

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் தனது வாழ்த்துகளை தெரிவித்ததோடு, சமூக முன்னேற்றத்துக்கு இளைஞர்சங்கத்தின் பங்களிப்பு அவசியம் தேவை எனவும் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் வலியுறுத்தினார். (ஒ-27)

## கைது

யாழ்ப்பாணம், நவ.19

மானிப்பாயில் 1500 மில்லிலீற்றர் கசிப்புடன் இளைஞர் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவலுக்கமைய ஆனைக்கோட்டை மூன்றாம் கட்டைப் பகுதிக்கு விரைந்த பொலிஸார் சந்தேக நபரைக் கைதுசெய்தனர்.

குறித்த நபருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ரி-125)



கட்டுவன் மேற்கு தெல்லிப்பழையைச் சேர்ந்த நடேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவரும் சிறந்த கட்டடக் கலைஞரும் வவுனியா மற்றும் கிளிநொச்சியில் கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகங்களில் பணிபுரிபவருமான வல்லிபுரம் தர்மகுலசிங்கம் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் கடந்த மாதம் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். (ச-131)

## தாடி, குடுமி முடியால் 'படி' வாகனம் இழுப்பு

### மட்டுவில்நபர் சாதனை

சாவகச்சேரி, நவ. 19

தீபாவளி தினத்தன்று மட்டுவில் சந்திரபுரத்தைச் சேர்ந்த செல்லையா- திருச்செல்வம் என்பவர் தனது தாடி முடியாலும் தலையின் குடுமி முடியாலும் 'படி' ரக வாகனமொன்றை 700 மீற்றர் தூரத்துக்கு இழுத்துச் சென்று சாதனை படைத்துள்ளார்.

மட்டுவில் கண்ணகை சனசமூக நிலைய முன்றிலிலிருந்து மட்டுவில் முத்துமாரி அம்மன் ஆலயம் வரையில் இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டது. (ச-13[illegible])



கந்தசஷ்டி விரதத்தை முன்னிட்டு பருத்தித்துறை தம்பசிட்டி, மலையந்தோட்டம் ஸ்ரீ முருகன் ஆலயத்தில் தினமும் அபிஷேகத்துடன் வழிபாடுகள் நடைபெறுகின்றன. (ரி-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பாதீடு எனும் பணயக்கைதி!

2024ஆம் நிதியாண்டுக்காக நாடாளுமன்றத்தில் தற்போது முன்வைக்கப்பட்டிருக்கும் பாதீடு வெற்றி பெற்றால் மட்டும்தான், நாணயநிதியம் தன் அடுத்த கட்ட நிதியை விடுவிக்கும் என்று தெரிவித்திருக்கின்றார் அமைச்சர் பந்துல குணவர்த்தன. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடனும் தலையீட்டுடனும்தான் இந்தப் பாதீடு உருவாக்கப்பட்டது. ஆதலால், பாதீட்டுக்கு முன்வைக்கப்படும் எதிர்ப்பு, இன்னமும் முழுமைப்படுத்தப்படாமல் இருக்கும் கடன் மறுசீரமைப்புகளை மேலும் பின்னடைவுக்குள் தள்ளும் என்றும் அவர் வெளிப்படையாகப் பேசியிருக்கின்றார்.

இலங்கை இன்னமும் இறவாதிருப்பதற்கு இந்தியா வழங்கிய உதவிகளுடன், நாணய நிதியத்தின் கடன்களும் பிரதான காரணம் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், முதலாம் கட்ட கடன் வழங்குகையில் இருந்த வேகம், அடுத்த கட்ட கடன் வழங்குகைக்காக நாணயநிதியத்திடம் கொஞ்சமும் இல்லை. நாணயநிதியம் என்பது ஐக்கிய நாடுகளின் முழுமையான நிதிப்பங்களிப்பில் இயங்கும் அறக்கட்டளையல்ல. ஒரு நாடு தான் பெற்றுக்கொள்ளும் கடன்களை மீளச் செலுத்தக்கூடிய இயலுமையில் இருந்தால் அல்லது அந்த இயலுமையை எட்டக்கூடிய நம்பிக்கையைக் காட்டினால் மட்டுமே நாணயநிதியம் தன் நிதியை அந்த நாட்டுக்கு வழங்கும். இலங்கையிடம் கடன்களை மீளச் செலுத்துவதற்கான கட்டமைப்பு இல்லாததாலேயே நாணயநிதியம் இன்னமும் தன் இரண்டாம் கட்டக் கடன்களை வழங்காமல் இழுத்தடித்து வருகின்றது. இவ்வாறானதொரு பின்னணியில், 2024ஆம் ஆண்டுக்கான பாதீடு என்பது புதிய வரிகளாலும் வரி மறுசீரமைப்புகளாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கும் என்பது எதிர்பார்க்கப்பட்டதே. இன்னும் சொல்லப்போனால், இந்த வரவு – செலவுத் திட்டம் இலங்கையர்களுக்கானது அல்ல. மாறாக சர்வதேச நாணயநிதியத்துக்கானது என்ற பொதுப்புரிதலும் தெளிவும் இலங்கையர்களுக்கு இருக்கவே செய்தது. ஆயினும், நாணயநிதியத்தின் தலையீட்டின் கீழ் பாதீடு உருவாக்கப்பட்டிருக்கின்றது என்பது பதற்றத்துக்குரிய தகவல்தான்.

உள்நாட்டுப் பொருளாதாரக் கட்டமைப்புத் தொடர்பில் பாதீட்டில் எந்த அழுத்தம் திருத்தமான நிலைப்பாடும் இல்லாவிட்டாலும், நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்கள் மற்றும் குளங்கள் உள்ளிட்ட கட்டுமானங்கள் தனியார் நிறுவனங்களின் அனுசரணையுடன் மறுசீரமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. சர்வதேச நாணயநிதியமும் நட்டத்தில் இயங்கும் நிறுவனங்கள் மறுசீரமைக்கப்படுவதை தன் முதன்மையான நிபந்தனைகளில் ஒன்றாகவே கொண்டிருக்கின்றது. இவ்வாறு செய்வதன்மூலம் நாணயநிதியத்தின் கடன்களைத் திருப்பிச் செலுத்தும் இயலுமை இலங்கைக்குக் கிட்டும். ஆனால், நீடித்த பொருளாதாரச் சுழற்சியின் பலாபலனை இலங்கையர்கள் அனுபவிப்பார்களா? என்றால் 'இல்லை' என்பதுதான் பதில். நீடித்த பொருளாதார இலாபம் தனியார்துறையின் பைகளையே நிரப்பும். தவிர, விவசாயத்துடன் நேரடித் தொடர்புடைய குளங்கள் உள்ளிட்ட கட்டுமானங்களிலும் தனியார்துறையின் முதலீட்டைப் பெற்றுக்கொள்வதும் ஆபத்தானதே. இலங்கையில், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு, விவசாயம் உள்ளிட்ட தொழில்துறைகள் மற்றும் அவைசார் கட்டுமானங்கள் வலுப்படுத்தப்படவேண்டும் என்பதை மறுத்துரைப்பதற்கில்லை. ஆனால், அதில் கொண்டுவரப்படும் தனியார்துறையின் வகிபங்கு பரிசீலனைக்கு உரியதொன்று. அது தொடர்பில் எதிர்க்கட்சிகளும், துறைசார் வல்லுநர்களும் கழுகுப்பார்வையைக் கொண்டிருக்கவேண்டும். ஏனெனில், 2024ஆம் ஆண்டுக்கான பாதீடு என்பது ஒரு பணயக்கைதி.


## வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2023



"நாகரிகத்தின் வேர் காடுகள்தான். கூட்டங்களில் இருந்து விலகியிருந்து மரங்களுடன், ஆறுகளுடன், ஏரிகளுடன் ஒன்றாய்க் கலந்திருந்த மனிதர்களிடம் இருந்துதான் தலைசிறந்த கருத்துகள் வந்துள்ளன. காடுகளின் அமைதி மனிதனின் அறிவாற்றல் பெருக உதவியுள்ளது."

இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)




# 'கோப்' தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப்பிரேரணை!

கொழும்பு, நவ.19

கோப் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டாரவுக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கையில்லாப்பிரேரணை கொண்டுவரவுள்ளது.

கோப் குழுவில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் இணங்கினால் கோப் குழுவின் தலைவர் பதவி விலகவேண்டும். நிலையியற் கட்டளைச் சட்டத்தில் உள்ள இந்த ஏற்பாடுகளுக்கமையவே இந்தப் பிரேரணை கொண்டுவரப்படுகின்றது. சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவிடம் நாளை திங்கட்கிழமை குறித்த பிரேரணை கையளிக்கப்படவுள்ளது.

சிறிலங்கா கிரிக்கெட்சபை தொடர்பான விசாரணையின் போது கோப் குழுவின் தலைவரான மொட்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார பக்கச்சார்பாகச் செயற்பட்டார் எனவும், அவரின் மகனைக்கூட கோப் குழுவுக்கு அழைத்துவந்துள்ளார் எனவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அதனால் கோப் குழுவில் இருந்து விலகவேண்டும் என்று அவருக்கு எதிரணிகள் அழுத்தம் கொடுத்துள்ளன. (எ-44)

# கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம் பாரிஸ் கிளப் உறுப்பினர்களிடம்

கொழும்பு, நவ.19

நாட்டின் கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் சீனாவின் என்ஸிம் வங்கிக்கும் இலங்கைக்கும் இடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கை பாரிஸ் கிளப் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவை மேற்கோள்காட்டி இந்தத் தகவல் வெளியாகியுள்ளது. இதன் ஊடாக இந்த ஆண்டு இறுதிக்குள் கடன் வழங்குநர்கள் தங்கள் கடன் மறுசீரமைப்பு முன்மொழிவுகளை முன்வைப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை முன்கொண்டு செல்ல சீனாவின் நிலைப்பாட்டை இலங்கை எதிர்பார்த்திருந்தது.

இந்த நிலையில், இலங்கையின் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்துக்கான சர்வதேச நாணயநிதியத்தின் அங்கீகாரத்தை இந்த வருட இறுதிக்குள் இலங்கை பெற்றுக்கொள்ளும் என மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார் என்று கூறப்படுகின்றது. (எ-இ)

**நாளை** 20.11.2023 திங்கட்கிழமை கார்த்திகை 04

சுபநேரம் : 12.09 - 01.39
ராகுகாலம் : 07.39 - 09.09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகக்கிண்ணத் தொடர்

# இந்தியா - அவுஸ்திரேலியா இறுதியில் இன்று மோதல்!





உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில், இந்தியா மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் இன்று பலப்பரீட்சை நடத்தவுள்ளன. உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மைதானமாக அறியப்படும், அஹமதாபாத் மைதானத்தில் பிற்பகல் 2 மணியளவில் இந்த ஆட்டம் இடம்பெறவுள்ளது.

இந்திய அணி இந்தத் தொடரில் எந்தவொரு ஆட்டத்திலும் தோல்வியடையாமல் விளையாடி வருகின்றது. அதனால், இன்று விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமை அந்த அணி மாற்றுவதற்கு வாய்ப்பில்லை என்றே கருதப்படுகின்றது. ரோகித், கில், கோலி, ஸ்ரேயஸ், ராகுல், சூரியக்குமார் யாதவ், ஜடேஜா, பும்ரா, சமி, குல்தீப் யாதவ், சிராஜ் என்றவாறாகவே இந்திய அணி அமையும் என்று எதிர்பார்க்கலாம். ஆனால், அவுஸ்திரேலிய அணிக்கெதிராகத் தொடர்ச்சியாகச் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தும் அஸ்வின் இறுதியாட்டத்தில் சேர்க்கப்பட வாய்ப்பு உள்ளது என்றும் தகவல் வெளிவந்துள்ளது. சூரியக்குமார் யாதவ் வெளியேற்றப்பட்டு அஸ்வின் களமிறக்கப்படலாம்.

அவுஸ்திரேலிய அணியைப் பொறுத்தமட்டில், ஹெட், வோர்னர், மிச்செல் மார்ஷ், சிமித், லபுஷேன், மக்ஸ்வெல், ஜொஸ், ஸ்ராக், கம்மின்ஸ், சாம்பா, ஹேசில்வூட் என்றவாறாக அணி கட்டமைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆஸ்திரேலிய அணி இறுதியாட்டத்துக்கு என பிரத்தியேக அணிச் சேர்க்கையை இலக்காகக் கொண்டிருக்கக்கூடிய அணி. ஆதலால், இந்த விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் மாற்றங்கள் ஏற்பட்டாலும் அதில் ஆச்சரியத்துக்கு ஒன்றுமில்லை. (ம)

## 130,000 ரசிகர்களுக்கு முன்னால் இந்தியாவை எதிர்ப்பது சவால்!

சிமித் தெரிவிப்பு



உலகக்கிண்ணத் தொடரில், ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ரசிகர்களின் முன்னிலையில் இந்திய அணியை வீழ்த்துவது சவாலானது என்று தெரிவித்துள்ளார் அவுஸ்திரேலிய அணியின் வீரரான சிமித்.

இந்திய அணி சிறப்பாக விளையாடி வருகிறது. இதுவரை எந்தவொரு அணியும் இந்தியாவை வீழ்த்தவில்லை. இவ்வாறான தொரு அணியை எதிர்த்து ஆடுவது மகிழ்ச்சியே - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## வருகின்றார் டுவா லிபா!




உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்துக்கு முன்பாக, மேற்கத்தேயப் பாடகி டுவா லிபாவின் இசை நிகழ்ச்சி இடம்பெறும் என்று சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐரோப்பிய கால்பந்தாட்டத் தொடர்களின் இறுதியாட்டங்களில் டுவா லிபாவின் இசை நிகழ்ச்சிகள் தவிர்க்கப்பட முடியாதவையாகத் தற்போது மாறி வருகின்றன. இந்தக் கலாசாரத்தைப் பின்பற்றியே கிரிக்கெட் உலகக்கிண்ண இறுதியாட்டத்தில் அவரின் இசை நிகழ்ச்சி அரங்கேற்றப்படலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)

## உலகக்கிண்ண இறுதியாட்டத்தில் விமானங்களும் வித்தை காட்டும்!

உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில், விமானங்களின் வானவேடிக்கைக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இறுதியாட்டத்தை முன்னெப்போதும் இல்லாத வகையில் கோலாகலமாக நடத்த இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை பல்வேறுபட்ட ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. இந்த நிலையிலேயே இதன் ஒரு பகுதியான விமானங்களின் வானவேடிக்கைக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ம)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வேலைவாய்ப்பு

O/L சித்தியடைந்தவர்களுக்கு பகுதி நேர, முழு நேர வேலைவாய்ப்பு உண்டு

* அடிப்படைச்சம்பளம்
* பிரயாண கொடுப்பனவு
* ஊக்கத்தொகை
* EPF, ETF
* மருத்துவ அனுகூலங்கள் என்பன உண்டு



**077 241 7007**

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலிச் சந்தியில் இருந்து கொக்குவில் செல்லும் வழியில் ஆடியபாத வீதியில் 200 மீற்றர் தூரத்தில் 06 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (CS 27022) S.1

**077 431 6132, 0771663859**


## ராணி சீதரனின் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், நவ. 19

ராணி சீதரன் எழுதிய "கடவுள் தான் அனுப்பினாரா?" எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்கானை கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மூத்த எழுத்தாளர் ஐ.சாந்தன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் யாழ்.மாவட்டக் கலாசார உத்தியோகத்தர் இ.கிருஷ்ணகுமார் பிரதம விருந்தினராக பங்கேற்கவுள்ளார். (ச-66)


## விபஸ்ஸனா தியான பயிற்சி முகாம்

காலம்
**5 முதல் 16 டிசம்பர் 2023 வரை.**

வயது: 18 வயதுக்கு மேற்பட்டவர்கள்

**பாத்திமா ரிட்ரீட் ஹவுஸ் பண்டதரிப்பு, யாழ்ப்பாணம்.**

**அனைத்து தியான நிகழ்ச்சிகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன (உணவு தங்குமிடம் உட்பட).**

விசேட இரு மொழிகள்
தமிழ் / ஆங்கிலம்



மேலும் தகவல்களுக்கு: விண்ணப்பித்தல்களுக்கும் அடுத்த வகுப்புகளுக்குமானதும்

மின் அஞ்சல்
**info@sobha.dhamma.org**

இணையதளம்
**www.sobha.dhamma.org**
**www.dhamma.org**

தொலைபேசி இலக்கங்கள்
**077 350 44 91, 071 643 94 54.**

மகிழ்வோடிருங்கள்...

## வாடகைக்கு

சுண்டுக்குளி பாடசாலைக்கு அருகாமையில் சகல வசதியுடன் கூடிய ஒரு கடை வாடகைக்கு உண்டு

தொடர்பு: **075 696 7431** (AK. 1)

## ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் வேலைவாய்ப்பு

யாழ். நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் என்னும் புத்தகசாலைக்கான வேலைவாய்ப்பு.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு:
**077 4949 683, 077 077 6469**

## காணி விற்பனைக்கு

வவுனியா - பண்டாரிகுளம் அம்மன் கோவிலுக்கு அருகில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

* வீட்டுத் தொகுதிக்கும் - மருத்துவ மனைக்கும் பொருத்தமான இடம்
* புகையிரத நிலையம் - வங்கிகள் - பஸ்டான்ட், மார்கட் என்பன மிக அருகாமையில்.

(Cs 25812) (N.1)

**077 755 1193**

## மணமகள் தேவை

யாழ். கிறிஸ்தவம் 1982 இல் பிறந்த கொழும்பில் வசிக்கும் Business செய்யும் மணமகனுக்க படித்த நல்ல குடும்ப பின்னணியுள்ள மணமகள் தேவை.

**076 041 0334**
[இந்துக்களும் OK]

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள உயரம் 6 அடி, முன்பக்கம் மூன்றரை அடி பக்கம் ஒன்றரை அடியுள்ள. கண்ணாடி Show case விற்பனைக்கு உள்ளது.
ரூபா 50.000/=



**T.P-077 711 0383**

## நல்லூர் ப.நோ. கூட்டுறவுச் சங்கம்
## பாரவூர்தி பகிரங்க ஏல விற்பனை

எமது சங்கத்திற்கு சொந்தமான 24 ஸ்ரீ 9364 இலக்க IZUZU ரக பாரவூர்தி பகிரங்க ஏலத்தில் 24.11.2023 திகதி வெள்ளிக்கிழமை 10.30 மணிக்கு இருபாலை வீதியில் உள்ள விவசாயப் பண்ணையில் இடம்பெற உள்ளது. லொறியினை பார்வையிட விரும்புவோர் அலுவலக நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை பார்வையிட முடியும். இவ் ஏல விற்பனையில் கலந்துகொள்ள விரும்புவோர் இன்றைய தினம் 10.30 மணிக்கு முன்னர் மீளளிக்க முடியாத முற்பணமாக ரூபா 1,000/- ம் மீளளிக்கக்கூடிய முற்பணமாக ரூபா 10,000/- ம் செலுத்தி கலந்துகொள்ளமுடியும்.

**தலைவர்,**
**நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்.**
**தொலைபேசி இல. 021 222 2143**

SOS CGUKDREB'S VILLAGES SRI LANKA

## எஸ்ஓஎஸ் தொழிற்பயிற்சி நிலையம் - யாழ்ப்பாணம்

எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமங்களானது பெற்றோர்களை இழந்த, கைவிடப்பட்ட சிறுவர்களுக்கு பூரணபராமரிப்பை 138 சர்வதேச நாடுகளில் 72 வருடங்களாகவும் இலங்கையில் 42 வருடங்களாகவும் வழங்கி வருகின்ற அரச, மத சார்பற்ற நிறுவனமாகும். இந்நிறுவனத்தில் பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி வெற்றிடம் : சிறுவர் பராமரிப்பாளர் கற்கை நெறிக்கான பயிற்றுவிப்பாளர்**
(Instructor – Child Care Giver)

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் / தொழிற்கல்வி நிறுவனம் ஒன்றில் பட்டதாரி / துறைசார் தகைமை NVQ Level (V) யினை / அதற்கு மேலதிகமான தகைமையினை கொண்டிருத்தல் அவசியம்.
TVET தரநிலைகளில் பரீட்சயமானதோடு அத்துறை சார்ந்த அனைத்து தகைமைகளையும் கொண்டிருப்பதோடு கற்பித்தல் ஆற்றல் மற்றும் குறைந்தது 03 வருட முன் அனுபவத்தையும் கொண்டிருத்தல் அவசியம்.
கணினி மற்றும் ஆங்கிலமொழியறிவினை கொண்டிருத்தல் கூடுதல் தகைமையாக கருதப்படும்.

**குறிப்பு:**

**சிறுவர் பராமரிப்பாளராக இந்நிறுவனத்தில் பணிபுரிய ஆர்வமுள்ள 28 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத பெண்கள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.**

இந்நிறுவனத்தின் சேவையாற்ற விரும்புவோர் தங்களது விண்ணப்பங்களை (தொலைபேசி இலக்கத்துடன்) **30.11.2023** இற்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள காரியாலய முகவரிக்கோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும். இப்பதவிகள் நிரந்தரமானதும் ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதியைக் கொண்டதுமாகும்.

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். நேர்முகத்தேர்விற்கான அழைப்பு தொலைபேசி மூலம் அறியத்தரப்படும்.

"SOS Children's Villages Sri Lanka is committed to promote and protect the children's rights and therefore, it is expected that every individual expected to join SOS Children's Villages Sri Lanka understand his/her responsibilities in protecting and keeping children always safe. The highest standards of selection, recruitment and verification procedures will be applied for all employment opportunities with our organization including thorough cross-checking of references."

தொடர்புகளுக்கு:

**எஸ்ஓஎஸ் தொழிற்பயிற்சி நிலையம்**
**இல:219, நாயன்மார்கட்டு,நல்லூர், யாழ்ப்பாணம்.**

தொ.பே : 021-221-1342 / 077- 444-2531
மின்னஞ்சல் : jaffna@soscvsrilanka.org
nanthakumar.mahenthiran@soscvsrilanka.org

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம், பருத்தித்துறை நகரத்திலிருந்து 850m தூரத்தில் அமைந்துள்ள 7 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.**

* CLEAR TITLE
* நன்னீர் ஊற்றுடன் கூடிய நிலப்பரப்பு
* 12 அடிப்பாதையுடன்
* பருத்தித்துறை நகரத்திலிருந்து 850m தூரம்
* குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி
* 50 தென்னை மரங்களுடன் கூடிய காணி.



**பார்வையிடும் நேரம் காலை 9 மணி - மாலை 6 மணி வரை**

தொடர்புகளுக்கு : **076 478 3391**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு திவச அழைப்பு



தோற்றம் 16 • 07 • 1984

மறைவு 29 • 11 • 2022

கடந்த 29.11.2022 அன்று இறைவனடி சேர்ந்த
எமது அன்பு மகன்

# நடராசா முரளிதரன் (முரளி)

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுதின திவசம் அவரது இல்லத்தில் இன்று (19.11.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும். இந் நிகழ்வில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளு மாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

நடராசா தவமணிதேவி (தாய்)
குடும்பத்தினர்.
077 210 0014, 077 071 1388

8/3, பெருமாள் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

(CS 27025) A-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 10 • 05 • 1990

மறைவு 18 • 11 • 2023

# சிறிகணேசராசா நிசாந்தன்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், கோணாந்தோட்டம் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிறிகணேசராசா நிசாந்தன் நேற்று (18.11.2023) சனிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிறிகணேசராசா மற்றும் கம்சவதனி (வதனி-ஆசிரியை, நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்) தம்பதிகளின் சிரேஷ்ட மகனும், நிதர்சினி (இத்தாலி), நிதர்சன் (பிரான்ஸ்), சஞ்சிகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சசிந்திரகுமார் (இத்தாலி), காந்திகா (பிரான்ஸ்), சுரேஸ்கரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அனிசா, அக்ஷரன், நிக்கிஷன் ஆகியோரின் மாமனாரும், அபிஷா, தருண ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (20.11.2023) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்தச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 41/9, மானிப்பாய் வீதி,
கோணாந்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்.
076 937 4795

(CS 27023) S-1

## மரண அறிவித்தல்

# திருமதி சுப்பிரமணியம் அகிலாண்டநாயகி



பிறப்பு 19.11.1943

இறப்பு 16.11.2023

'அகிலகம்', 28/1, யாழ். வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் அகிலாண்டநாயகி கடந்த (16.11.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை இராசம்மா தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான அமிர்தலிங்கம் அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், தவலிங்கம் (நோர்வே), சிறீலிங்கம், தயாபரி (பெண்கள் அபிவிருத்தி இணைப்பாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்), ஜனார்த்தன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அருமைத் தாயாரும், விஜயகுமாரி (நோர்வே), கிரிதரன் (முகாமையாளர் MC LEOD Hospital, இணுவில்), ரவீனா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், வரப்பிரகன், அகித்யா, சுபீட்ஷன், ரேஷ்னி (அவுஸ்திரேலியா), கவிநயா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், கணேசலிங்கம் (கனடா), கனகலிங்கம் (அவுஸ்திரேலியா), குமரலிங்கம் (இங்கிலாந்து), தனநாயகி (கனடா), கேசவலிங்கம் (கனடா), குணலிங்கம் (நோர்வே), சாந்தநாயகி (கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரியும், புஷ்பராணி, நாகரத்தினம், பாஸ்கரதேவி, சிவராமலிங்கம், சகுந்தலாதேவி, நந்தினி, சிறீகனகையா மற்றும் காலஞ்சென்றவர்களான பூலோகசுந்தரம், சிவஞானசுந்தரம், சிவபாதம், திருநாவுக்கரசு மற்றும் அருள்தேவி ஆகியோரின் மைத்துனியும், சோதிநாயகி (லண்டன்), மண்டலநாயகி (லண்டன்), அமரர் பத்மநாயகி மற்றும் டாக்டர் கிருபரன் (லண்டன்) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.11.2023) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு இல: 0047 46902079
077 215 6359,
0061411161285

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27024) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணிக்கமுடியாத நிலையில் மல்லாவி– பாண்டியன்குளம் வீதி



## சீரமைக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, நவ. 19

**முல்லைத்தீவு, மாந்தை கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பாண்டியன் குளம் சிவன்கோயில் வீதி எந்தவிதப் புனரமைப்புமின்றி போக்குவரத்துச் செய்ய முடியாதவாறு காணப்படுகிறது. இந்த வீதியைப் புனரமைக்க அதிகாரிகள் முன்வர வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

குறித்த வீதியானது நீண்டகாலமாகப் புனரமைப்பின்றி மக்கள் போக்குவரத்துச் செய்யமுடியாதவாறும் குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது.

அதிகளவான மக்கள், நோயாளர்கள் எனப் பலரும் நாள்தோறும் இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர். மருத்துவ தேவை நிமித்தம் பயணிக்கவேண்டுமாயின் 10 கிலோமீற்றர் தூரம் சுற்றுப் பாதையைப் பயன்படுத்தவேண்டியுள்ளது.

இந்த வீதி மல்லாவி நகருக்குச் செல்லும் பிரதான போக்குவரத்துப் பாதையாகவும் காணப்படுகிறது.

தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் இந்த வீதி மேலும் மோசமடைந்து காணப்படுகிறது.

எனவே அதிகளவான மக்கள் பயன்படுத்தும் இந்த வீதியை உரிய அதிகாரிகள் கவனமெடுத்து, புனரமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ச-78)



# வெள்ளத்தில் மூழ்கிய புதுக்குடியிருப்பு நகரம்!

முல்லைத்தீவு, நவ.19

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் மழை வெள்ளத்தால் 8 குடும்பங்களைச் சேர்ந்த 22 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகப் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இரவு பெய்த கடும் மழையால் புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதி உள்ளிட்ட மக்களின் குடியிருப்புப் பகுதிகள், வணிக நிலையங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் பலவற்றுக்குள்ளும் பாடசாலைக்குள்ளும் மழை வெள்ளம் புகுந்துள்ளதால் அந்தப் பாடசாலை இயங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு கிழக்கு, மேற்கு, ஆனந்தபுரம், கோம்பாவில் போன்ற கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் முதன்மை வீதிகள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் கிராமங்களில் உள்ள கிராம வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கி மக்களின் இயல்பு வாழ்க்கைக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

நகர்ப் பகுதியில் உள்ள பாடசாலையான சிறி சுப்பிரமணிய வித்தியாசாலை இதனால் இயங்கவில்லை. பாடசாலை வளாகத்துக்குள் மழை வெள்ளம் புகுந்துள்ளதால் மாணவர்கள் கல்வி கற்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு பாடசாலைக்குச் சென்ற மாணவர்கள் திரும்பி வீடு சென்றுள்ளார்கள்.

பிரதேசசபையினர் கனரக இயந்திரங்களைக் கொண்டு நகரில் காணப்படும் வடிகால்களைச் சீர் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (ஒ-19)

# அதிபர் சேவை பயிற்சி வகுப்பு ஆரம்பம்

சாவகச்சேரி நவ.19

இலங்கை அதிபர் சேவை தரம் IIIக்கு நியமனம் பெற்றவர்களுக்கான பயிற்சி வகுப்புகள் வடமாகாணத்தில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, சாவகச்சேரி இந்துக்கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி, துணுக்காய் கல்வி வலய அலுவலகம் என்பவற்றில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகின.

அந்தந்த வலயக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெறும் பயிற்சி வகுப்புகளில் துறைசார் விரிவுரையாளர்களால் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. (ரி-9)

# 108 சங்காபிஷேகமும் சோமவார உற்சவமும்

வட்டுக்கோட்டை, தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம் கண்ணகியம்மன் ஆலயங்களில் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு விசேட 108 சங்காபிஷேகமும் பிற்பகல் 3.30 மணிக்கு சோமவார உற்சவமும் இடம்பெறவுள்ளது.

அதேவேளை இந்த மாதத்தில் மூன்று திங்கட்கிழமை சோமவார உற்சவம் நடைபெறும் என்றும் ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ச)

# கசிப்புடன் ஒருவர் கைது

கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் காரைநகர், களபூமியில் கடந்த வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

களபூமி காவலரண் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய 28 வயதுடைய சந்தேகநபரே கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து 2லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது.

சந்தேகநபருக்கெதிராக ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்ய மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ச- 125)

# எஞ்சிய அரசியல் கைதிகளையும் உயிருடன் விடுவிக்க வழிசெய்க!

## குரலற்றவர்களின் குரல் அமைப்பு ஜனாதிபதியிடம் கோரிக்கை!

யாழ்ப்பாணம், நவ.19

எங்களையும் உயிருடன் விடுவிக்க வழிவகுங்கள் என 28 ஆண்டுகளாகச் சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கையை ஏற்று, ஜனாதிபதி பொதுமன்னிப்பளித்து விடுவித்து அவர்களது எஞ்சியுள்ள வாழும் காலத்தையேனும் மெய்யுறுதி செய்யவேண்டுமென குரலற்றவர்களின் குரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பாகிஸ்தான் தூதுவர் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் 16 ஆண்டுகளாக விளக்கமறியலில் தடுத்துவைக்கப்பட்டிருந்த மூன்று தமிழ் அரசியல் கைதிகளை, 'நிரபராதிகள்' எனத் தெரிவித்த கொழும்பு மேல் நீதிமன்றம் கடந்த 10ஆம் திகதி விடுதலை செய்துள்ளது.

ஒரு சந்தேகநபரை 'நிரபராதி' என நிரூபிப்பதற்கு எமது நாட்டில் 15ஆண்டுகள் எடுத்துள்ளதென்பது கவலைதரும் விடயமே. இருப்பினும், மிகநீண்ட காலங்களாக துன்பங்களை மாத்திரமே அனுபவித்து வந்த இவர்கள் விடுதலைபெற்று அவர்தம் குடும்பங்களுடன் இணைந்துள்ளமை பெருமகிழ்ச்சியைத் தருகிறது. இவர்கள் விடுதலையாகி வருகின்றபோது, அங்கு சிறையில் மீதமிருக்கும் எமது உறவுகள், 'எங்களையும் உயிருடன் விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்!' எனக்கூறி விழிகலங்க வழியனுப்பி வைத்துள்ளனர். ஆகவே, இதே போன்று, மேலும் சந்தேகநபர்களாக நீண்டகாலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நான்கு அரசியல் கைதிகளும் காலதாமதமின்றி விடுவிக்கப்படவேண்டும்.

அத்துடன், 15 முதல் 28 ஆண்டுகளாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள தண்டனைக் கைதிகள் 10 பேரையும், ஜனாதிபதி பொதுமன்னிப்பளித்து, அவர்களது எஞ்சியுள்ள வாழும் காலத்தையேனும் மெய்யுறுதி செய்ய அவர்களை உயிர்ப்புடன் விடுவிக்க வேண்டுமென, ஒரு மனிதநேய அமைப்பாக நாம் விநயமுடன் வேண்டுகை செய்கின்றோம். ஆயினும், கடந்த பல வருடங்களாக தமிழ் அரசியல் கைதிகளின் பொது நன்மைக்கென்று குரலுயர்த்தி வருகின்ற 'குரலற்றவர்களின் குரல்' அமைப்பானது, மீதமுள்ள 14தமிழ் அரசியல் கைதிகளினதும் விடுதலை வாழ்வு மெய்ப்படும் வரையில், நடைமுறைக்குச் சாத்தியமான அனைத்து வழிகளிலும் தளர்வுறாது செயற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம் என்றுள்ளது. (அ-100)

# குழிக்குள் வீழ்ந்து இருவர் காயம்

சாவகச்சேரி, நவ.19

வீதியோரத்தில் மழை வெள்ளத்தினுள் காணப்பட்ட குழிக்குள் மோட்டார் சைக்கிள் சில்லு இறங்கியதால் அதில் பயணித்த தாயும் மகனும் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை மாலை சாவகச்சேரி டச்சு வீதியில் நடந்துள்ளது.

மீசாலையிலிருந்து டச்சு வீதியூடாகப் பயணித்து பெருங்குளம் செல்வதற்கு முற்பட்டவேளையில் வீதியின் ஆரம்பத்தில் காணப்பட்ட வெள்ளத்திலிருந்த குழிக்குள் சில்லு இறங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

டச்சு வீதியிலிருந்து பெருங்குளம் வரையான வீதி தார்க்கலவை வீதியாக அண்மையில் மாற்றப்பட்டது. அவ்வேளையில் வீதி முகப்பில் வெள்ளம் வழிந்தோடக்கூடியவாறு அமைக்கப்படாததால் அப்பகுதியில் வெள்ளம் தேக்கமடைந்துள்ளது. விபத்து இடம்பெற்ற பின்னர் வெள்ளத்தினுள் காணப்படும் பகுதிக்கு மரக்கிளைகள் போடப்பட்டுள்ளன. (ஒ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

2023ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் கடந்த வெள்ளிக்கிழமை வெளியாகியிருந்தன. அவற்றில் பாடசாலைகள் ரீதியாக அனுப்பப்பட்ட பெறுபெறுகளின் விவரம்

**யாழ்.சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**

ம.மகீவன் 159, த.விதுஷா 156, இ.பிரணவன் 152, ப.கஜானன் 147, ம.ஆகீஷா 151, கோ.ஜின்சன் 147, ஜெ.கினுஷா 146.

**மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்**

கே.சர்மி 160

**குடமியன் அ.த.க. பாடசாலை**

சி.லக்சின் 179, சி.அக்ஷிகா 178 வி.நர்மிதா 175, சி.டிலக்சனா 150, ற.திகழ் 146

**யாழ். சாவகச்சேரி மகளிர் கல்லூரி**

செ.ஜஸ்வினி 179, இ.கிஷாருகா 161, யோ.கபிஷேக் 154, ஹீ.பிரிக்ஷிதா 154, ச.பானுஷன் 152

**யாழ். கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை**

அ.கவினயா 178, சி.கபினாஷ் 177, ம.டர்சிகா 176, கு.அபினன் 174, யோ.ரம்யா 174, சு.சந்தோஸ் 173, ஷ.ஷதுஜனன் 169, சி.ஜஸ்மிகா 169, தா.சுஜானா 166, ரா.கவினா 163, சா.சரணிகா 161, தே.தனுமிதன் 159, ஜெ.கவிஸ்கா 155, பா.லேனுஜா 154, கி.பிரணிகா 154, பு.தேனுஜன் 153, பு.பிருந்தன் 151, ச.கஸ்னி 150, த.வேணுஜா 149, ம.ஸாகித் 148, ச.டக்சியா 147, ஞா.விஜயவாசன் 146, உ.தட்சிகா 146

**யாழ். அளவெட்டி அருணோதயாக் கல்லூரி**

தி.கருணியன் 185, சி.சதுர்த்திகன் 172, இ.திகழ்கா 171, ச.யோகிதன் 171, சி.தனுர்சயா 169, ரா.நிகிலேஸ் 165, ச.பிரவினா 165, உ.பங்கயன் 164, ர.சஜித் 163, ரா.கிருத்திகா 163, நா.திஷாந்ஜோய் 160, ச.ரக்சன் 160, செ.ஜெயராம் 158, து.ஆரணன் 157, க.யர்சகன் 156, லோ.ஜிசாந் 155, ம.அக்சயா 155, ஜெ.டிலக்சன் 155, கி.வர்சிகன் 155, சோ.நிஷானந் 153, கி.பகீரதி 152, ம.அஸ்வினி 152, பி.கேமப்பிரியா 151, ச.அபிசாந் 150, ஆ.சாருஸா 150, வ.யனுசிகா 149, சி.வைஸ்னவன் 148, பா.மிஷான் 147, தே.தர்மிகன் 147, வி.ஹேபிநாத் 147, சி.சுஜித் 147, சா.டிவாணியா 146, த.கஸ்வின் 145

**பளை இந்து ஆரம்பப் பாடசாலை**

ஜெ.சதுஜிகன். 158, கு.மிருணா 154, ந.அபிசாளினி 151, சு.சங்கீர்த்தனா 145

**சண்டிலிப்பாய் வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலை**

ர. அங்கவி 163

**கைதடி குருசாமி வித்தியாலயம்**

சி.புவிராஜ் 151, சி.தர்ஷிகா 150, ம.மதுர்ஷனா 147

**கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்**

மு.தனுசன் 168

**சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி**

அ.நிர்த்தேஷ் 149

**கிளி.பேராலை சி.சி.த.க. பாடசாலை**

பா.அபர்ணா 166, தி.திவ்யா 152, ர.டிசானி 139, பு. அஜிந்தன் 127, த. கிதியோன் 111, வ.கேமலதன் 91, மனோஜ் 85

**யாழ். இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்**

ஜ.பவிக்சனா 159, கு.அபிஷா 158

**யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை**

ஜெ.அ.வனிஸ்ஹறா 196 , ரா.லக்ஷாணிகா 176, சு.ஜனிசா 175, இ.சுபராகவி 175, அ.டிலக்சனி 172, ம.ஜிலோப்சி 169, சி.சிவலோயினி 168, சு.றோஸ்மிகா 165, ஜ.தியாஷ்மி 165, ஜெ.யான்சிகா 163, ப.நந்டனா 163, த.திருசனா 162, ம.கின்சிகா 160, ஜெ.ஸீருதிகா 158, ந.பிறித்திகா 157, செ.அக்ஷயா 156, க.கெனிஸ்ரிகா 156, சு.அஷ்மிகா 155, து.பிரணகா 155, ம.கிரிஷா 154, கு.சஸ்மிதா 152, சி.கிதுஷி 151, உ.சுவாகி 151, ச.விதுஷியா 150, வி.விஷாளினி 150, ப.தன்சிகா 149, ஹே.ரஷ்மிகா 149, சா.பவிசா 148, செ.ஜஷ்மிகா 148, ச.சஞ்சனா 147, சு.அபிசாஜினி 146, யோ.கன்சிகா 146, ப.தேனிகா 145, சி.தருணிகா 145, கி.சக்ஸனா 145. (ரி-159-63)

# புதுக்குளம் கனிஷ்ட வித்தி புலமைப்பரிசிலில் சாதனை

வவுனியா, நவ.19

வவுனியா வடக்கு வலயத்திலுள்ள கிராமப்புறப் பாடசாலையான புதுக்குளம் கனிஷ்ட வித்தியாலயத்திலிருந்து 20 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

இந்தப் பாடசாலையிலிருந்து கடந்த 10 வருடங்களுக்கு மேலாக 15 தொடக்கம் 35 வரையிலான மாணவர்கள் வெட்டுப்புள்ளியைக் கடந்து சாதனையீட்டி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-75)

# இறம்பைக்குளம் ம.வி.யில் 74 மாணவர்கள் சித்தி!

வவுனியா, நவ.19

வவுனியாவில் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளில் இறம்பைக்குளம் மகளிர் பாடசாலையில் 74 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் புள்ளிகள் எடுத்துச் சாதனை படைத்துள்ளனர். (ரி-110)

# கழிவுநீரை ஊற்றிவிட்டுச் சென்ற பவுஸர் மக்களால் மடக்கிப்பிடிப்பு

யாழ்ப்பாணம், நவ. 19



யாழ்ப்பாணம் செம்மணி நாயன்மார்கட்டுப் பகுதியில் கழிவுநீரை ஊற்றி விட்டுச் செல்ல முயன்ற பவுஸர் வண்டியொன்று அந்தப் பகுதி மக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு சுகாதாரப் பரிசோதகர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

திருநெல்வேலியில் உள்ள நட்சத்திர விடுதியொன்றின் கழிவு நீரை அகற்றும் பவுஸர் வண்டி, தொடர்ச்சியாக அந்த இடத்தில் கழிவு நீரை ஊற்றிவிட்டுச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்துள்ளது. இதை அவதானித்த ஊரவர்கள் மறைந்திருந்து தருணம் பார்த்து கையும்மெய்யுமாக பவுஸரை மடக்கிப் பிடித்துள்ளனர். பொறுப்பற்ற தன்மையுடன் தொடர்ச்சியாக அந்தப் பகுதியில் கழிவுநீர் பவுஸரிலிருந்து திறந்து விடப்படுவதால், துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதாரச் சீர்கேட்டு நிலையும் ஏற்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். பவுஸரின் உரிமையாளருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (ம-20)

## வவுனியாவில்

# பின்தங்கிய பாடசாலைகள் புலமைப்பரிசிலில் சாதனை



வவுனியா, நவ. 19

வவுனியா தெற்கு வலயத்திலுள்ள பின்தங்கிய பாடசாலைகளிலிருந்து இரண்டு மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் 184 புள்ளிகளைப் பெற்று வவுனியா மாவட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளனர்.

2023 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

இந்தப் பெறுபேற்றில் வவுனியா தெற்கு வலயத்தின் பின் தங்கிய பாடசாலையான ஆச்சிபுரம் அ.த.க.பாடசாலை மாணவன் ரவீந்திரதாசன் சரோன் மற்றும் அதே வலயத்தைச் சேர்ந்த வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவன் நவரட்ணம் சகானன் ஆகியோர் 184 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் முதலிடம் பெற்றுச் சாதனையீட்டியுள்ளனர். (ச-18)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தமிழக மீனவர்கள் கைது

எல்லை தாண்டி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து 22 தமிழக மீனவர்கள் 2 படகுகளுடன் இலங்கைக் கடற்படையினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(அ-ஒ-100)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 11.04.1928

மறைவு 15.11.2023

எமது ஆலயத்தின் நிர்வாக சபை உறுப்பினராக நீண்ட காலமாக இருந்து நிர்வாகச் செயற்பாடுகளிற்கும் ஆலயத்தின் வளர்ச்சிக்கும் பெரும் தொண்டாற்றிய

### மருதன் கதிரவேலு

அவரது மறைவு எமக்கு பேரிழப்பாக உள்ளது. அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கைதடி வீரகத்திப் பிள்ளையாரை பிரார்த்தனை செய்கின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*

நம்பிக்கை பொறுப்பாளர் பரிபாலனசபையினர்
கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில்
முதலாயா கோயில்கள், கைதடி

CS27001 (AK-1)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தவப்பேறு சரவணை 22 . 05 . 1943



சிவப்பேறு யாழ்ப்பாணம் 10 . 11 . 2021

10.11.2021 புதன்கிழமை இறைபதம் அடைந்த
எமது குடும்பத்தலைவர்

### அமரர் பாலசிங்கம் தங்கவேல்

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மைவிட்டு பிரிந்து
ஆண்டு இரண்டு மறைந்ததையா
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கிறீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கன்றோம்

இல.539, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 9175, 077 760 0444

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(cs.26960) (N.1)

## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்
## குடியியல் நடவடிக்கைக் கோவை பிரிவு 16 இன் கீழான அறிவித்தல்

நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 102(3) இன் கீழ் செய்யப்படும் விண்ணப்பம்

1. சண்முகநாதன் சற்குணமூர்த்தி
   இல 76/3 கலாசாலை வீதி, திருநெல்வேலி.
2. பாலசிங்கம் சண்முகநாதன் 53/4 A,
   வைமன் வீதி, யாழ்ப்பாணம்
3. விஸ்வலிங்கம் அசோகலிங்கம்
   42/4, அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.
4. நாகராசா விஜயகுமார்
   259, கோயில் வீதி, நல்லூர்
5. ஜெகதீஸ்வரன் தனேஸ்குமார்
   57, வைமன் வீதி, யாழ்ப்பாணம்
6. சவானந்தராஜா கோபிகிருஷ்ணா
   53/5 வைமன் வீதி, யாழ்ப்பாணம்.
7. சண்முகதாசன் ஜனோஜன்
   45/9, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
8. குணநாதன் லவன்
   383/24, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.
9. செல்வராசா துசிந்ததாஸ்
   3ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, யாழ்ப்பாணம்

- வழக்காளிகள்

வழக்கு இல: நம்பிக்கைச்சொத்து/67/2023

எதிர்

1. நடராசாக் குருக்கள் சண்முகரத்தின ஐயர்
2. சிவசுப்பிரமணியக் குருக்கள் கமல்ராஜ் குருக்கள்
3. நாகராசா ஐயர் பெண் சந்திரகுமாரி
4. நாகராசா ஐயர் சிவதர்சக் குருக்கள்
5. நாகராசா ஐயர் ஹரிதர்ச ஐயர்
6. செல்வராசா குருக்கள் பராசக்தி அம்மா

அனைவரும்
140, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

- எதிராளிகள்

மேற்படி இலக்க வழக்கின் வழக்காளிகளால்

1. வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம் ஒரு சமயஞ்சார்ந்த தர்ம நோக்கத்திலான ஒரு நம்பிக்கைப் பொறுப்பு (Religious Charitable Trust) என்ற கட்டளைக்கும், தீர்ப்பிற்கும்
2. பிராதின் ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனமானது மேற்குறித்த வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம் எனும் நம்பிக்கைப் பொறுப்பின் ஆதனம் எனும் கட்டளைக்கும் தீர்ப்பிற்கும்.
3. பிராதுடன் வ14 என அடையாளமிடப்பட்டு அணைக்கப்பட்ட முகாமைத்திட்டத்தினை ஆலயத்தின் முகாமைத்திட்டம் எனப் பிரகடனப்படுத்தும் கட்டளைக்கும், தீர்ப்பிற்கும்
4. குறித்த முகாமைத்திட்டத்தின் வழி தெரிவு செய்யப்படும் நபர்களே குறித்த நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் என்ற பிரகடனத்திற்கும், கட்டளைக்கும்
5. எதிராளிகள் வண்ணை ஸ்ரீ வீரமாகாளியம்மன் தேவஸ்தானத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களோ, பரம்பரைப் பூசகர்களோ இல்லை என்ற கட்டளைக்கும், தீர்ப்பிற்கும்
6. வண்ணை ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலயத்திற்கான பெறுநர்/ பெறுநர் குழுவை நியமிக்கும் **இடைக்காலக் கட்டளைக்கும் கோரி**

இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்படி கோரப்பட்ட நிவாரணம் தொடர்பில் குறித்த விடயத்தில் அக்கறையுள்ள நபர் எவரும் எதிர்வாதிடலாம் என குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் பிரிவு 16 இன் கீழ் அறிவித்தல் தரப்படுகின்றது.

மேலும் இவ் வழக்கானது எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு 12ம் மாதம் 06 ஆம் நாளன்று இம் மன்றின் திறந்த மன்றில் அழைக்கப்படவிருக்கின்றது என்றும் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

மன்றின் கட்டளைப்படி

திகதி: 15.11.2023.

பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணம்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோயிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கு, நல்லூர் பிரதேச சபை நல்லூர், பிரதேச செயலர் பிரிவு, J/105 கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட "அம்பொருவெளியும் மின்னெறிந்தனும்" நிலப்பரப்பு நாற்பது கிணறுகளும் கோவில்களும் கோவில் கட்டிடங்களும் வான்பயிர் செய்பயிர்களும்

எல்லைகள்

கிழக்கு: சிவப்பிரகாசம் பெண் சின்னத்தங்கத்தின் பின்னுரித்தாளர்களும் மறுபேருக்குமுரிய ஆதனம்.
வடக்கு: றோட்டும் நடராஜக்குருக்கள் மற்றும் மறுபங்காளரின் ஆதனம்
மேற்கு: செல்லக்குருக்கள் பெண் அன்னப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள்
தெற்கு: கதிரவேற்பிள்ளை பாலசிங்கத்தின் உரிமைக்காரருக்குரிய ஆதனம்
இவ்வெல்லைக்குட்பட்டவை அடங்கலும்

பதிவாளர்

## மரண அறிவித்தல்



### திருமதி இராசமணி சண்முகராசா

இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி சண்முகராசா அவர்கள் (17.11.2023) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புக்குட்டி நாச்சனின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னக்குட்டி இலட்சுமியின் மருமகளும், காலஞ்சென்ற சண்முகராசாவின் (காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை ஊழியர்) பாசமிகு மனைவியும், காலஞ் சென்றவர்களான சோமசுந்தரம், சேதுராசா, முருகையா, செல்லம்மா பத்மநாதன் சற்குணதேவி மற்றும் இராஜநாயகி (சங்கீத ஆசிரியை - ஓய்வுநிலை) ஆகியோரின் சகோதரியும், சிவபாலகிருஷ்ணன் (சீமெந்துத் தொழிற்சாலை முன்நாள் ஊழியர்), சிவபாஸ்கரன் (நோர்வே), காலஞ்சென்ற சிவயோகேஸ்வரன் மற்றும் றஜீதா, சிவஜெனீஸ்வரன், சிவராஜேஸ்வரன் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திலகவதி, விஜயராணி (நோர்வே), சிவரஞ்சிதாதேவி, சண்முகநாதன் (கோகுலன் மில் உரிமையாளர்), தவராணி, தாரணி (இத்தாலி) ஆகியோரின் மாமியும், லதாஜினி, கஜநாத், சுதாஜினி, காலஞ்சென்ற பங்கஜநாத் மற்றும் வனுஜா, சர்மிலன், கனுஜா, சாய்மிலன், துஷ்யந்தன், தனுசன், திவ்யா, கோகுலன், கோபிதன், பவிதா, லாவண்யா, தாழினி, சஸ்வின் ஆகியோரின் பாட்டியும், யஸ்மீலா, கோகுலஜா, அபிராமி, விபூஷிகா, கேசவிகா, யசிந்தா, ஓவியா தர்ஷிதன், துபிஷாளினி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.இல:077 780 5329

தகவல்
குடும்பத்தினர்.

(CR 41061) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி கட்டடம் விற்பனைக்கு

* பலாலி வீதி திருநெல்வேலி சந்திக்கு அருகாமையில் பிரதான வீதியுடன் அமைந்துள்ள 5 1/4 பரப்புக் காணியும் கட்டடமும் விற்பனைக்கு உள்ளது.
* A-9 வீதி திருமுறுகண்டியில் பிரதான வீதியுடன் அமைந்துள்ள ஒரு ஏக்கர் காணியும் கட்டடமும் விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு:-077 38 66 250

CR 41022A-1


## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 02 . 1935



மறைவு 17 . 11 . 2023

**துரைசிங்கம் பாக்கியரத்தினம்**

புன்னாலைக்கட்டுவனை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் பாக்கியரத்தினம் அவர்கள் கடந்த (17.11.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.11.2023 செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப. 10.00 மணியளவில் தகனக் கிரியைக்காக காடைகரம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு,
புன்னாலைக்கட்டுவன்.

தகவல்: குடும்பத்தினர்.
077 945 4688
074 067 7637

(CS 27016) A-1

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**இராசையா குமாரசுவாமி**

நான்காண்டு நகர்ந்தாலும்
நம்மை விட்டு அகலாது உங்கள் நினைவு
நினைவுகள் வருகையில்
நிலைகுலைந்து போகின்றோம் அப்பா
உங்களை நினைக்காத நொடிகளில்லை

அன்பினால், பண்பினால், நட்பினால்
ஆளுமையால் எங்கள் அனைவரது
உள்ளங்களில் குடியிருக்கும்
எங்கள் தந்தையை நாம்
என்றென்றும் நினைத்திருப்போம்.

அன்னை மடியில் 24.04.1938
இறைவன் அடியில் 03.11.2019

பாடசாலை வீதி,
கல்வயல்,
சாவகச்சேரி.

நினைவுகளுடன்
மனைவி மற்றும்
பிள்ளைகள்

(cs 27030) (S-1)

## மரண அறிவித்தல்



**வடிவேல் சின்னம்மா**

சுழிபுரத்தை பிறப்பிடமாகவும், நுவரெலியா, தற்போது அமெரிக்காவில் வசித்தவருமான வடிவேல் சின்னம்மா கடந்த (08.11.2023) அன்று சிக்காக்கோ அமெரிக்காவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வைரமுத்து வடிவேல் (நுவரெலியா வடிவேல் பிறதர்ஸ் முன்னாள் உரிமையாளரும் மற்றும் லங்கெம் நிறுவன, நுவரெலியா மற்றும் யாழ்ப்பாண முன்னாள் விற்பனை முகவர்) அவர்களின் அன்பு மனைவியும், ஜெயகுமாரி (Canada), மன்மதகுமாரி (USA), வசந்தகுமாரி (சித்தன்கேணி), வசந்தகுமார் (USA), ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம் (ஓய்வு பெற்ற விவசாய ஆராய்ச்சியாளர், விவசாயத் திணைக்களம்), மகேந்திரநாதன் (பொறியியலாளர் USA), மற்றும் கோணேசநாதன் (Rtd Asst.Manager, BOC), வாகீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கைராசிப்பிள்ளை, சங்கரப்பிள்ளை மற்றும் தேவராசா, பாலசிங்கம் ஆகியோரின்அன்புச்சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிதம்பரம்-கணபதிப்பிள்ளை, இராமநாதன், மகேஸ்வரி முருகேசு மற்றும் தவச்செல்வி, ரதிகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், பேரப்பிள்ளைகளின் அன்புப் பேர்த்தியும், பூட்டப்பிள்ளைகளின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2023) ஞாயிற்றுக்கிழமை சிக்காக்கோ அமெரிக்காவில், அமெரிக்க நேரம் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"மாதர்சங்க வீதி,
சித்தன்கேணி

தகவல்:
வசந்தகுமாரி கோணேசநாதன்
(மகள்)
021 225 1143

(CR 41060) S-1

# சங்கிலி அறுப்பு: சந்தேகநபர் கைது

சாவகச்சேரிப் பொலிஸாரின் துரித நடவடிக்கையால் பெண்ணின் சங்கிலியை அறுத்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டிருப்பதுடன் சங்கிலி மற்றும் திருட்டுக்குப் பயன்படுத்திய மோட்டார்சைக்கிள் ஆகியனவும் கைப்பற்றப்பட்டுள்ளன. கச்சாயில் கடந்த 6ஆம் திகதி பிள்ளைகளை பாடசாலையிலிருந்து ஏற்றி வரச் சென்ற பெண் ஒருவருடைய மூன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு பவுண் சங்கிலியை மோட்டார்சைக்கிளில்வந்த சந்தேகநபர் அறுத்துக்கொண்டு தப்பித்திருந்தார். சி.சி.ரி.வி. காட்சிகளின் அடிப்படையில் சந்தேகநபர் கடந்த 14 ஆம் திகதி கைதானார். (அ-ஒ-27)

## மணல் ஏற்றுவதற்கு
# போலி அனுமதிப்பத்திரத்தை பயன்படுத்தியவர்கள் கைது!

மணல் ஏற்றுவதற்காக போலியான அனுமதிப்பத்திரங்களைப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் கிளிநொச்சியைச் சேர்ந்த இருவர் யாழ். மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மணல் ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் பெறவேண்டியது கட்டாயம். இந்த அனுமதிப்பத்திரங்கள் கனியவளத் திணைக்களத்தால் வழங்கப்படும். அந்த அனுமதிப்பத்திரங்களையே போலியான முறையில் தயாரித்து இவர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

ஒரு மணல் அனுமதிப்பத்திரம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது அந்தப் பத்திரம் போலியானது என்று கண்டறியப்பட்டிருந்தது. அதையடுத்து யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணறோயன் தலைமையிலான பொலிஸ் குழு இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்திருந்தது.

விசாரணையின் அடிப்படையில் கிளிநொச்சி மற்றும் விசுவமடுவைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். போலியான அனுமதிப்பத்திரம் என்று தெரிந்தும் அதை ஒருவருக்கு வழங்கியமை, போலியான அனுமதிப்பத்திரம் என்று தெரிந்தும் அதைப் பயன்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போலியான அனுமதிப்பத்திரம் ஒன்றுக்காக சுமார் 15 ஆயிரம் ரூபா வரையில் அறவிடப்பட்டுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சந்தேகநபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-எ-26)


## வீடு வாடகைக்குத் தேவை

03 பேர் கொண்ட சிறிய குடும்பம் வசிப்பதற்கு, யாழ் நகர்ப்பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.

0775500444

(cs 27030) (S-1)



## BETTA CONSULTANT

* **Work in** UK, Canada, Romania, Poland
* **Student Visa** UK, Canada.
* **Visit Visa** UK, Canada, Europe
* **Gulf's** - Engineering, Hotels, Drivers & Security

K.K.S.Road, Kondavil.
Whatsapp-077 1715949
T.P.No: 075 2211 721
070 3558 445

(CS 27029)A-1


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி விஜயலட்சுமி சர்வானந்தம்** அவர்களின்
அன்புத் தாயார்
**புவனேஸ்வரி அப்புத்துரை**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



தோற்றம் 09.05.1940 மறைவு 17.11.2023

பாடசாலைச் சமூகம்
யா/வண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம்,
ஆனைக்கோட்டை.

# தவறான முடிவெடுத்த இளைஞன் உயிரிழப்பு

தந்தை உயிரிழப்பால் மனதளவில் பாதிக்கப்பட்ட மகன் தவறான முடிவெடுத்து நேற்று உயிரிழந்துள்ளார். சாவகச்சேரி பொலிஸ் பிரிவில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

3 ஆண்டுகளுக்கு முன்னர் தந்தைக்கு மகனுக்கும் கருத்து முரண்பாடு ஏற்பட்டதை அடுத்து மகன் தாக்கியதாகத் தெரிவித்து தந்தை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மறுநாள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருந்தார்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு யாழ். மேல் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு சிறையிலடைக்கப்பட்டிருந்த இளைஞர் (மகன்) பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இளைஞன் வெளியே சென்று வரும் போதெல்லாம் 'தந்தையைக் கொன்றவன்' எனக் குறிப்பிட்டு அயலவர்கள் கூறி வருவதாகவும், அதனால் மனதளவில் பாதிக்கப்பட்டிருந்த இளைஞர் தவறான முடிவெடுத்து உயிர் மாய்த்துள்ளார். நேற்று சனிக்கிழமை காலை வீட்டிலிருந்து அவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது. (அ-ஒ-100)

# தமிழகத்துக்கு மற்றொரு கப்பல் சேவை

கொழும்பு, நவ. 19


காங்கேசன்துறை - நாகப்பட்டினம் இடையிலான இன்னுமொரு பயணிகள் கப்பல் சேவை ஜனவரி முதல் வாரத்தில் காலநிலையைப் பொறுத்து ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தக் கப்பலில் 150 பயணிகள் தலா 60 கிலோ பொதிகளுடன் பயணிக்கலாம். ஒரு வழிப் பயணக்கட்டணமாக இலங்கை ரூபாவில் 17 ஆயிரம் மற்றும் வரிகள் அறவிடப்படும். (அ-ஒ-இ)

## மோ.சைக்கிள் திருட்டு

யாழ்., நவ. 19

வடலியடைப்பில் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல்சர் ரக மோட்டார் சைக்கிள் திறப்பு கழற்றப்படாத நிலையில் நேற்று முன்தினம் இரவு திருடப்பட்டுள்ளது. இதுகுறித்து இளவாலை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-ஒ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


படம் - ஐ.சிவசாந்தன்

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் கந்தசஷ்டி உற்சவத்தின் சூரசங்கார நிகழ்வு நேற்று நடைபெற்றது.

மயிலத்தமடுவில் கொடூரம்;

## சட்டவிரோத மின்வேலி; பசு மாடு உயிரிழப்பு!

மட்டக்களப்பு, நவ. 19

மயிலத்தமடு, மாதவனையில் அத்துமீறி பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள சிங்களக் குடியேறிகளால் அமைக்கப்பட்ட சட்டவிரோத மின்வேலியில் சிக்கி தமிழ்ப்பண்ணையாளர் ஒருவருக்குச் சொந்தமான பசுவொன்று நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளது. (அ-ஒ-100)

### வெளிநாட்டு...

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த இரு தினங்களில் மட்டும் இவ்வாறான பண மோசடி தொடர்பான 7 முறைப்பாடுகள் யாழ். மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்த முறைப்பாடுகளின் அடிப்படையில், வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து இரு நாட்களில் மட்டும் இரண்டரைக் கோடி ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கு ஆள்களை அனுப்பும் முகவர்கள் என்று அறிமுகப்படுத்திக் கொள்பவர்களே மோசடியில் ஈடுபடுகின்றனர். சமூக வலைத்தளங்கள் மற்றும் 'வட்ஸ் அப்' குழுக்களில் காணப்படும் விளம்பரங்களை நம்பியே பெரும்பாலானவர்கள் மோசடியாளர்களிடம் சிக்கியுள்ளனர். மோசடியாளர்கள் போலியான விசா ஆவணங்களைக் காட்டி நம்ப வைத்து ஏமாற்றியுள்ளனர்.

வெளிநாடுகளில் உள்ளவர்கள் இங்குள்ள உறவினர்களை அழைக்க முடியும் என்ற நடைமுறையைக் காட்டியும் பல மோசடிகள் நடந்துள்ளன. முகவர்கள் என்று அறிமுகப்படுத்திக் கொள்பவர்கள் பல்வேறு காரணங்களைத் தெரிவித்து ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் பணம் கோரியுள்ளனர். இதற்கான பணம் பல தடவைகள் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளது. ஒரு கட்டத்தில் முகவர்கள் என்று தங்களை அறிமுகப்படுத்திக் கொள்பவர்களின் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருக்கின்றன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இந்த மாதம் மட்டும் இவ்வாறான 10 முறைப்பாடுகள் யாழ்ப்பாண மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவில் பதிவாகியுள்ளன. சுமார் 6 கோடி ரூபா வரையில் இந்த மாதத்தில் மட்டும் மோசடி செய்யப்பட்டுள்ளமை முறைப்பாடுகளின் அடிப்படையில் கண்டறியப்பட்டுள்ளது. ஒவ்வொரு முறைப்பாட்டாளர்களும் பல இலட்சம் ரூபாவை மோசடியாளர்களிடம் இழந்துள்ளனர்.

சமூக வலைத்தளங்களிலும், குழுக்களிலும் பகிரப்படும் விளம்பரங்கள் தொடர்பாகப் பொதுமக்கள் அவதானத்துடன் இருக்கவேண்டும் என்றும், பயண முகவர்கள் என்று அறிமுகப்படுத்திக் கொள்பவர்கள் சட்டரீதியாகப் பதிவு செய்யப்பட்டவர்களா என்பதைப் பொதுமக்கள் உறுதிப்படுத்திக் கொள்வது அவசியம் என்றும் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியாட்சகர் ஜெகத் விஷாந்த தெரிவித்துள்ளார். (அ-எ-26)

### வவுனியா...

நொச்சி, அக்கராயன் பொலிஸில் விசேட புலனாய்வுப் பிரிவில் பணிபுரியும் திசாநாயக்கா (வயது-27), வவுனியா கந்தசாமி கோவிலடியைச் சேர்ந்த சண்முகநாதன் (வயது-72) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

ஓமந்தையிலிருந்து வவுனியா நோக்கி பொலிஸ் உத்தியோகத்தர் மோட்டார் சைக்கிளில் பயணித்து கொண்டிருந்த போது மற்றொரு மோட்டார் சைக்கிளில் பயணித்துகொண்டிருந்த முதியவர் சாந்த சோலைக்குத் திரும்ப முற்பட்டபோதே விபத்து இடம்பெற்றது. விபத்தில் காயமடைந்த இருவரும் உடனடியாக மீட்கப்பட்டு வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

மருத்துவமனையில், பொலிஸில் பணிபுரிந்த இளைஞர் உயிரிழந்த நிலையில் பின்னர் முதியவரும் மரணித்துள்ளார். (அ-ஒ-75-100-110-125)

### மார்கழி...

மார்கழி இசை விழாவும், சிறிய, நடுத்தர உற்பத்தியாளர்களின் கண்காட்சியும் விற்பனையும் யாழ். இந்தியத் துணைத் தூதரகம், நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக் கூடல் மற்றும் யாழ். வணிகர் கழகம் இணைந்து யாழ்ப்பாண கலாசார நிலைய மண்டபத்தில் அடுத்த மாதம் 27, 28, 29ஆம் திகதிகளில் நடத்தவுள்ளதாகவும், இந்த நிகழ்வு தவில், நாதஸ்வரம், வயலின், கர்நாடக சங்கீதம், நடனம், நாட்டிய நாடகம் போன்ற கலாசாரப் பண்பாட்டு நிகழ்வுகளை உள்ளடக்கிய ஒரு மாபெரும் இசைவிழாவாக அமையும் எனவும் யாழ். வணிகர் கழகத்தின் தலைவர் இ.ஜெயசேகரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இசைவிழா நிகழ்ச்சிகள் மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை நடைபெறவுள்ளன. இசைவிழா நடைபெறும் நாட்களில் மண்டபத்துக்கு வெளியில் அமைந்துள்ள திடலில் சுமார் 150 க்கும் மேற்பட்ட காட்சிக் கூடங்களில் உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும் விற்பனையும் காலை 9 முதல் இரவு 9 மணிவரை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காட்சியறைகளை மட்டும் இலவசமாக வழங்குவதற்கு யாழ். வணிகர் கழகம் ஏற்பாடு செய்துள்ளது. மேலும் ஏற்றுமதிக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்தும் முகமாக ஏற்றுமதித்துறையைச் சேர்ந்த வர்த்தகச் சம்மேளனங்கள் இதில் பங்குபற்றவுள்ளன.

சிறிய நடுத்தர உற்பத்தியாளர்களுக்குத் தேவையான புதிய நவீன தொழில்நுட்ப இயந்திரங்களை இந்தியத்துணைத் தூதரகம் மூலம் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்து அதனுடைய விவரங்களுடன் கண்காட்சியில் காட்சிப்படுத்த எண்ணியுள்ளோம்.

மாகாணத் திணைக்களங்கள் மற்றும் மத்திய அரசுத் திணைக்களங்கள் மூலம் விண்ணப்பித்தவர்களைத் தவிர யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த சிறிய நடுத்தர மற்றும் பெரிய உற்பத்தித்துறை சார்ந்த தொழிற்சாலைகளை வைத்திருப்போர் கண்காட்சியில் பங்குபற்ற விரும்பினால் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னதாக வடமாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்டச் செயலர்கள் ஊடாக வர்த்தக சம்மேளனங்கள் மூலம் அல்லது எம்முடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு தங்களுக்குத் தேவையான காட்சியறைகளைப் பதிவு செய்து கொள்ளமுடியும்.

இல. 165 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரடியாகவோ, 0212222367, 0765754993 என்ற தொலைபேசி எண் ஊடாகவோ, jaffnachamberofcommerce@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாகவோ தொடர்புகொள்ள முடியும் - என்றார். (அ-ஒ-26-27-66)

### துவாரகாவின்...

தினத்துக்கு வெளியிட்டு அவர் உயிருடன் இருக்கிறார் என காண்பிப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுவதாக வெளிநாட்டு புலனாய்வு அமைப்புகள் தெரிவித்துள்ளன என 'டெய்லி மிரர்' செய்தி வெளியிட்டுள்ளது. (அ-ஒ-இ)

### பொன்னாலையில்...

வித்தார். யாழ்ப்பாணம், பொன்னாலை - பருத்தித்துறை பிரதான வீதியில் பொன்னாலைச் சந்தியிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் துர்நாற்றம் வீசியதைத் தொடர்ந்து பொதுமக்கள் சென்று பார்வையிட்டுள்ளனர். அங்கு உருக்குலைந்த தலையில்லாத ஆணின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

இதேவேளை - கடந்த 14ஆம் திகதி பொன்னாலை கிராமஅலுவலர் அலுவலகத்தை சேதப்படுத்தும் விதத்தில் மன நலம் பாதிக்கப்பட்ட ஒருவர் செயற்படுகின்றார் என ஊர் மக்கள் கிராம அலுவலருக்குத் தெரியப்படுத்தினர். பொலிஸாருக்கு இது தொடர்பில் தெரியப்படுத்தப்பட்டது. இந்நிலையில் பொலிஸார், தாங்கள் அவரை அழைத்துச் சென்றதாக கிராம அலுவலருக்குத் தெரிவித்தனர். அவரின் ஒளிப்படத்திலுள்ள ஆடைகளும், நேற்று முண்டமாக கண்டுபிடிக்கப்பட்ட சடலத்தின் ஆடைகளும் ஒத்துப்போகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-27-125)

### மழைக்கான...

மழைக்கான வாய்ப்புண்டு என யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை மூத்த விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார். (அ-ஒ-5)

காணி விற்பனைக்கு
கல்வியங்காட்டில் நல்ல சுற்றாடலில் 1 3/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 781 3417

காணி விற்பனைக்கு
காரைநகர் கோவளப் பகுதியில் 3 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 224 7641

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 51 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- நிலப்பரப்பு, நன்னீரூற்று
- 18 அடிப்பாதையுடன்
- சித்த மருத்துவமனைக்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
- யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
- நல்ல சூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணி
- நன்னீர் ஊற்று நிலம்
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம்: காலை 6.00 - மாலை 6.00 மணிவரை.

தொடர்பு: 071 173 3911
076 853 5022
076 213 7239
(CS 26992) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குஷ்பு யாழ்ப்பாணம் வந்தால் துடைப்பக்கட்டை வரவேற்பு

தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் எனக் கூறியநடிகைகுஷ்பு யாழ்ப்பாணத்துக்கு வந்தால் அவருக்கு துடைப்பக்கட்டையால் வரவேற்பு வழங்கப்படும். அதைவிட கழிவு பொருள்களாலும் அவருக்கு ஆசீர்வாதம் வழங்கப்படும் எனஅகிலஇலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளரும் வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவருமான எம்.வி.சுப்ரமணியம் தெரிவித்துள்ளார்.

'குஷ்பு பகிரங்கமாக தமிழினத்தின் முன் மண்டியிட்டு தான் கூறிய கருத்தை மீளப்பெறவேண்டும், மன்னிப்புக் கேட்க வேண்டும்' என்றும் குறிப்பிட்டார். (அ-ஒ-27)

## மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட பெற்றோர். கொழும்பை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் 1995ல் பிறந்த கும்பராசி அவிட்ட நட்சத்திரம் CHARTERED ACCOUNTANT (ACCA LONDAN) கல்வித்தகைமையுடைய தற்போது Company யில் ASSISTANT MANAGER ஆகத் தொழில் புரியும் குருகுல மணமகளுக்கு படித்த நல்ல வேலையில் உள்ள தகுந்த மணமகனை SOFTWARE ENGINEER, ENGINEER, DOCTOR, SENIOR ACCOUNTANT ஆகிய வேலையில் உள்ள மணமகனை பெற்றோர் எதிர் பார்க்கின்றனர். கௌரவ குடும்பத்தினர் தொடர்பு கொள்ளலாம். உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ நல்ல வசதியுடன் மேற்கூறப்பட்ட படிப்புடன் தொழில் புரியும் மணமகன் விரும்பப்படுவர்.

Mobile : 074 081 5533,
Telephone : 011 233 9643

## கணினி தட்டெழுத்தாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கும் அலுவலகம் ஒன்றிற்கு கணினி தட்டெழுத்தாளர் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

076 573 4507

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

af பிரெஞ்சு மொழி

- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna

## பணி நிலை வேண்டுகை

யாழ் நகரில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றிற்கு **காசாளர் தேவை**. யாழ் நகரிற்கு அருகாமையில் இருப்பவர் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்

வேலுப்பிள்ளை & சன்ஸ்
இல. 243, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
075 240 7976

## மின் பிறப்பாக்கி விற்பனைக்கு

குறைந்த மணிநேரப் பயன்பாட்டுடன் இங்கிலாந்து தயாரிப்பான **Cummins Generator 275 KVA** விற்பனைக்கு உண்டு.

070 605 3194

## பணியாளர் தேவை

யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றிற்கு கீழ் வரும் பணியாளர்கள் உடன் தேவை முன் அனுபவம் விரும்பத்தக்கது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

1) **சமையலாளர்** (Chef) :-
யாழ்ப்பாணத்து பாரம்பரிய சைவ உணவு வகைகள் செய்யத் தெரிந்திருத்தல் வேண்டும். (சம்பளம் - 75,000 தொடக்கம் 100,000 வரை வழங்கப்படும். வயது எல்லை : 20 -25

2) **சமையல் உதவியாளர் (Kitchen Helper)** (முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. வயது எல்லை : 20 - 50)

3) **பாதுகாவலர் (Security)** :- தமிழ், ஆங்கிலம், சிங்களம் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. இத் துறை சார்ந்த குறைந்தது 1 வருட அனுபவம் அவசியம் மற்றும் வயது எல்லை : 20 - 50

4) **வரவேற்பாளர் (Receptionist)** :- தமிழ், ஆங்கிலம், சிங்களம் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. அடிப்படைக் கணினி அறிவு மற்றும் குறைந்தது 1 வருட அனுபவம் அவசியம்.

தொடர்புகளுக்கு : 077 251 4981, 077 872 9806
நேரில் சமூகம்தரவேண்டிய முகவரி :
**195, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
(195, Temple Road, Nallur, Jaffna)
Colombo :- 132, Central road, Pettah, Colombo - 12

# ஆறாத நினைவில் ஆறாம் ஆண்டு



தோற்றம்
15.12.1944

மறைவு
19.11.2017

## அமரர் பொன்னர் சின்னையா
### (Honda இராசு)

(பிரபல புகையிலை வர்த்தகரும் அன்னதான புருசரும், யோகாஸ் ஐஸ்கிறீம், எரிபொருள் நிரப்பு நிலையம் - மந்திகை, PS ஸ்தாபனம் ஆகியவற்றின் ஸ்தாபகரும் பழவத்தை காளி அம்பாள் ஆலய அறங்காவலரும் வியாபாரிமூலை இன்பர்சிட்டி சித்திவிநாயகர் ஆலய திருவிழாக்கால அன்னதான பெரும் பணியை முன்னின்று நடத்தியவரும்)

**திதி: துதிகை வளர்பிறை (14.12.2023) வியாழக்கிழமை**

ஆலமரம் சாய்ந்து
ஆறாண்டு ஆனதய்யா
ஆறாகிப் போன விழி
காயாமல் கிடக்குதய்யா

ஆறாத காயமிது
தனல் போல வாட்டுதய்யா
மாறாத பாசமிது
உன் நினைவை பாடுதய்யா!

மண்ணை விட்டுப் போன பின்னும்
கண்ணுக்குள்ளே வாழும் ஐயா
நீர் எம்மை விட்டுப் போனதை
நாம் நம்பவில்லை பொய்யா!

பொத்தி வைச்ச நேசமெல்லாம்
எம்மைச் சுத்தி வருகுதய்யா
இராசு தீபச் சுடர் மலரில்
உனதன்பை பருகுதய்யா!

கொண்டா இராசு என்னும் பேர்
இன்னும் ஊருக்குள்ளே வாழுதய்யா
நீ தொண்டு செய்த சபைகளெல்லாம்
உந்தன் புகழ் பாடுதய்யா



சின்னையா பேரைச் சொல்லி
பசியாறும் ஜீவனெல்லாம்
எங்கையா போனீர் என்று
கண் கலங்கி வாடுதய்யா!

பழவத்தை ஊரையெல்லாம்
அழவைத்த தந்தையே!
உமை இழந்த பின்னும்
நாம் வாழ்வது என்பது விந்தையே!

பழவத்தை,
வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

உங்கள் நினைவில் என்றும்
யோகன் குடும்பம்
யோகாஸ் ஐஸ்கிறீம் (Swiss)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சஞ்சீவி

விண்வரும் மேகங்கள் பாடும் மாவீரர்கள் நாமங்கள் கூறும்
கண்வழி கங்கைகள் பாயும் இவர் காவிய நாயகர் ஆகும்
புதைந்த குழியில் இருந்து நீங்கள் எழுந்து வாருங்கள்
எரிந்த இடத்தில் இருந்து நீங்கள் நிமிர்ந்து வாருங்கள்

பக்கங்கள்: 05

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 கார்த்திகை : 3 ஞாயிற்றுக்கிழமை (19.11.2023) சிகரம் : 173



**பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் தமிழ் மக்கள் எதிர்கொண்ட நெருக்கடிகள் சொல்லிமாளாதவை. அந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக சட்டவழியில் 4 தசாப்தங்களுக்கும் மேலாகப் போராடி வருபவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராஜா அவரது சட்டப் போராட்டத்தில் முன்னிலையான வரலாற்று முக்கியத்துவமான வழக்கு விடயங்களை இந்தத் தொடர் மூலம் அவர் 'உதயன் சஞ்சீவி' வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றார்.**

# குட்டிமணி, ஜெகன், ஞானவேல் வழக்கு (1982 – 1983)

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் முதல் வழக்கு

○ கே.வி.தவராசா

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் முதலாவது வழக்காக குட்டிமணி என அழைக்கப்படும் செல்வராஜா யோகச்சந்திரன், ஜெகன் என்ற ஜெகநாதன், கறுப்பன் என்ற ஞானவேல் ஆகிய மூவருக்கும் எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினையே கொள்ள முடியும். இந்த வழக்குத்தான் நான் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் எடுத்த பின்னர் நான் கனிஷ்ட சட்டத்தரணியாக ஆஜராகிய முதல் வழக்காகும். அன்றிலிருந்து இன்று வரை நான்கு சகாப்தங்களுக்கு மேலாக அரசியல் கைதிகளின் விடுதலைக்காகப் பல ஆயிரக்கணக்கான வழக்குகளில்,நாட்டிலுள்ள பல நீதிமன்றங்களில் வாதாடிய போதிலும் இந்த வழக்கின் நிகழ்வுகள் அழியாத நினைவுகளே.



40 ஆண்டுகளுக்கு முன்னர் குட்டிமணி என்ற பெயர் இலங்கையில் பெரும் உணர்வலைகளை ஏற்படுத்தியது. அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் செல்வராஜா யோகச்சந்திரன். அவர் 1970களில் இலங்கையில் தமிழ் ஈழ போராட்டக் குழுக்கள் மக்களுக்கான விடுதலையை இலக்காகக் கொண்டு செயற்பாட்டு வடிவம் பெறத்தொடங்கியபோது ரெலோ இயக்கத்தின் தளபதியாகக் குட்டிமணி திகழ்ந்தார். 1983 ஜூலை 25 ஆம் திகதி வெலிக்கடைச் சிறைச்சாலையில் கொல்லப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளில் அவரும் ஒருவர்.




1981ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25ஆம் திகதி நடைபெற்ற நீர்வேலி மக்கள் வங்கிக் கொள்ளையிலும், இரட்டைக் கொலையுடனும் தொடர்புடையவர்கள் என அரசினால் சந்தேகிக்கப்பட்டிருந்த ரெலோ இயக்கத்தின் தலைவரான தங்கத்துரை என அழைக்கப்படும் நடராஜா தங்கவேல், குட்டிமணி என அழைக்கப்படும் செல்வராஜா யோகச்சந்திரன், தேவன் என்கின்ற செல்வதுரை சிவசுப்பிரமணியம், கறுப்பன் என்ற ஞானவேல், நடேசதாசன், ஜெகநாதன் என்ற ஜெகன் ஆகியோருக்கு எதிராக இரண்டு குற்றச்சாட்டுப் பத்திரங்களை சட்டமா அதிபர் சிவாபசுபதி கொழும்பு [illegible] மன்றில் [illegible] செய்தார்.

**வழக்கு - 1**
நீர்வேலி வங்கியைக் கொள்ளையிடுகையில் துப்பாக்கிச் சூடு நடத்தி பொலிஸ் கான்ஸ்டபிள் சிவனேசன் என்பவரைக் கொன்றமை

**வழக்கு - 2**
நீர்வேலி வங்கியைக் கொள்ளையிட்டு பணத்தை அபகரித்தமை

முதல் வழக்கில் எதிரிகளாக குட்டிமணி, ஜெகன், கறுப்பன் ஆகிய மூவரும் இரண்டாவது வழக்கில் குட்டிமணி, தங்கத்துரை, நடேசதாசன், தேவன் ஆகிய நால்வரும் எதிரிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர். சிவனேசன் கொலை வழக்கின் எதிரிகளான குட்டி மணி, ஜெகன் ஆகிய இருவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது மூன்றாவது எதிரியான கறுப்பன் கொலைக் குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

இந்த வழக்கு விசாரணையில் அரச தரப்பில் பிரதி சொலிசிடர் ஜெனரல் திலக் மாரப்பன, சிரேஷ்ட சட்டத்தரணி சுனில் டி சில்வா, கனிஷ்ட சட்டத்தரணிகளாக மொகான் பீரிஸ், காந்திலால் குமாரசிறி ஆகியோர் ஆஜராகியிருந்தனர். இதில் விசேட அம்சம் யாதெனில் இந்த வழக்கை தாக்கல் செய்த சட்டமா அதிபர் சிவாபசுபதியைத் தொடர்ந்து இந்த வழக்கில் அரச தரப்பில் ஆஜராகிய பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலக் மாரப்பன,சுனில் டி சில்வா, கனிஷ்ட சட்டத்தரணியாக மொகான் பீரிஸ் ஆகியோர் பிற்காலத்தில் சட்டமா அதிபராக பதவி வகித்ததுடன், மொகான் பீரீஸ் பிரதம நீதியரசராகவும் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

குட்டிமணி, ஜெகன், கறுப்பன் சார்பாக சிரேஷ்ட [illegible] முருகேசு சிவசிதம்பரம், நவரட்ணம் (கரிகாலன்), [illegible] மூர்த்தி சிறிஸ்கந்தகுமார் ஆகியோருடன் கனிஷ்ட சட்டத்தரணியாக ஆஜராகும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

1981ஆம் ஆண்டு சித்திரை மாதம் 5ஆம் திகதி படகு மூலம் இந்தியாவுக்குத் தப்பிச்செல்வதற்காக பருத்தித்துறைக்குப் பக்கத்தில் மணற்காட்டுக் கடற்கரையில் முக்கியமான போராளிகள் சிலர், வள்ளத்துக்காக சில மணிநேரம் காத்திருந்தனர். ஆனால் அந்த வள்ளம் குறிக்கப்பட்ட நேரத்துக்கு வரவில்லை. மாறாக மாலை மூன்றேகால் மணியளவில் கடற்படையினரும் பொலிஸாரும் அவர்களைச் சுற்றி வளைத்தனர். குட்டிமணியை கைதுசெய்ய முயற்சித்த வேளையில் அவர் தனது கையில் வைத்திருந்த கைத்துப்பாக்கியால் தன்னைத் தானே நெற்றியில் சுட்டு உயிரை மாய்த்துக்கொள்ள முயன்றார். ஆனால் தங்கத்துரை கைத்துப்பாக்கியை தட்டிவிட குறி சற்றுத்தவறி தலையில் சூட்டுக்காயத்துடன் குட்டிமணி மயங்கி கீழே சாய்ந்தார். பின்னர் இவர்கள் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்காக ஆனையிறவு முகாமில் தடுத்து வைக்கப்பட்டு கொழும்புக்கு அழைத்துவரப்பட்டனர்.

இந்தக் காலகட்டத்தில் ரெலோவின் மற்றுமொரு முக்கியமான உறுப்பினரான ஜெகன் என்று அழைக்கப்படும் ஜெகநாதனும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பனாகொடை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். சில நாள்களில் மற்றவர்களும் கைது செய்யப்பட்டனர்.

இவர்களைக் கொடூரமாகச் சித்திரவதை செய்தே பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தினர். தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்கையில் பொலிஸார் தங்களை எவ்வாறு சித்திரவதை செய்தனர் என்பதை குட்டிமணியும் ஜெகனும் தமது சாட்சியங்களில் பின்வருமாறு பதிவு செய்திருந்தனர்.

"எங்களைக் கைது செய்து தடுத்து வைத்திருந்தபோது சட்டத்தரணிகள், உறவினர்கள், நண்பர்கள் எவரையும் சந்திக்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டு தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டிருந்தன.

பல மாதங்கள் தடுப்புக் காவலில் வைத்து தொடர்ச்சியாக வன்மமிகு தாக்குதலை மனிதாபிமானமற்றமுறையில் மேற்கொண்ட பொலிஸார், எம்மை இழிவுபடுத்தியும் வந்தனர். விலங்கிடப்பட்ட நிலையில் பல மணித்தியாலங்கள் தொங்கவிட்டனர்.

முழுமையாக நிர்வாணப்படுத்தி நீண்டநேரம் துப்பாக்கியின் பின்புறத்தாலும் தாக்குதல் நடத்தி தலைகீழாகத்தொங்கவிட்டு இரும்புக் கம்பிகளை பிறப்புறுப்பில் உட்செலுத்தியதுடன் சிறுநீரும் கழிவறைக் கழிவு நீரும் பலவந்தமாகப் பருக்கப்பட்டு இரவு - பகல் என்று தொடர்ச்சியாகத் தூங்கவிடாது விசாரித்தார்கள். மிளகாய்த் தூளை உடல் முழுவதும் பூசிவிடுவதோடு, மிளகாயை எரித்து அதன் புகையைச் சுவாசிக்கச் செய்தார்கள். மருத்துவ சிகிச்சை முற்றாக மறுக்கப்பட்டிருந்தது"

துரிதகதியில் வழக்கை முடிக்கவேண்டும் என்பதற்காக விசாரணைகள் தொடர்ச்சியாக நான்கு மாதங்கள் நடைபெற்றன. அரச தரப்பினரதும் எதிர்த்தரப்பினரதும் வாதப் பிரதி வாதங்களின் பின்னர் தீர்ப்புக்காக ஒத்திவைக்கப்பட்டது. தீர்ப்பு வழங்கப்படும் நாளில் நீதிமன்றில் பெருந்திரளான பார்வையாளர்கள் கூடியிருந்தனர்.

1983ஆம் ஆண்டு பங்குனி மாதம் முதலாம் திகதி அவர்களுக்கு நீதிபதியால் மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மரண தண்டனைத் தீர்ப்பை வழங்கிய பின்னர் நீதிபதி குட்டிமணியிடமும் ஜெகனிடமும் அவர்களது இறுதி ஆசை என்ன என்று வினவியபோது அனைவரையும் ஆச்சரியப்படுத்தும் வகையில் கண்ணீர்மல்கச் செய்த தனது இறுதி விருப்பைக் குட்டிமணி தெரிவித்தார்.

(தொடரும்)

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலாந்தன்

# குஷ்புவும் கலா மாஸ்டரும்

# முற்றவெளிக்கு வருவார்களா?



*'யாதும் ஊரே யாவரும் கேளிர்*
*தீதும் நன்றும் பிறர் தர வாரா'*

மற்றொரு இசை நிகழ்ச்சியும் சர்ச்சையாக மாறியிருக்கிறது. அடுத்த மாதம் 21ஆம் திகதி யாழ். முற்றவெளியில் தமிழகப் பாடகர் ஹரிஹரனின் இசை நிகழ்ச்சி நடக்கவிருக்கிறது. அந்த நிகழ்ச்சியைப் பிரபல்யப்படுத்துவதற்காக களமிறக்கப்பட்ட இரண்டு தமிழகப் பிரபலங்கள் சர்ச்சையாக மாறியிருக்கிறார்கள்.

ஒருவர் நடன ஆசிரியர் கலா மாஸ்டர். மற்றவர் நடிகை குஷ்பு. கலா மாஸ்டர் கலைஞர் ரீ.வி.யில் 'மானாட மயிலாட' நிகழ்ச்சியை நடத்தியவர். இறுதிக்கட்டப் போரில் ஈழத் தமிழர்கள் துன்பப்பட்டுக் கொண்டிருந்தபோது அவர் தமிழக மக்களைத் திசை திருப்புவதற்காக அந்த நிகழ்ச்சியை நடத்தினார் என்று அவர் மீது குற்றச்சாட்டு. குஷ்பு தன்னிடம் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்குப் பதில் கூறும் போது, விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாதிகள் என்று வர்ணித்திருக்கிறார் என்ற குற்றச்சாட்டு.





அந்த நிகழ்ச்சியை ஒழுங்குபடுத்துவது கனடாவில் வசிக்கும் ஓர் ஈழத்தமிழர். இந்திய நடிகை ரம்பாவின் துணைவர். புலம்பெயர்ந்த நாடுகளில் வெற்றிபெற்ற முதலீட்டாளர்களில் ஒருவர். அவர் ஹரிஹரனை முற்றவெளியில் பாட வைக்க விரும்புகிறார். அந்த நிகழ்ச்சியின் கவர்ச்சியைக் கூட்டுவதற்காக இரண்டு பிரபல்யங்களை இணைத்திருக்கிறார். அதுதான் இப்பொழுது பிரச்சினை.

அப்படித்தான் கடந்த மாதம் நடந்த சந்தோஷ் நாராயணனின் இசை நிகழ்ச்சியும் சர்ச்சையாக மாறியது. ஆனால் சந்தோஷ் நாராயணன் கூறுகிறார் "நான் ஈழத்தமிழ்க் குடும்பத்தில் ஒருவன்" என்று. அவருடைய மனைவி கோண்டாவிலைச் சேர்ந்தவர். 'ஸீ' தமிழ்த் தொலைக்காட்சியில் 'சரிகமப' நிகழ்ச்சியில் பேசும்போது, அவர் புலம்பெயர்ந்த தமிழர்களே தன்னைப் போன்ற இசையமைப்பாளர்களுக்கு "சாப்பாடு போடும் கடவுள்கள்" என்று வர்ணிக்கின்றார். இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை என்றும் கூறுகிறார்.

அவரை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துக் கொண்டு வந்தவர் ஒரு புலம்பெயர்ந்த தமிழ் முதலீட்டாளர். கோடம்பாக்கத்தில் வெற்றிகரமாக முதலீடு செய்தவர். இயக்குநர் ஷங்கருக்கும் வடிவேலுவுக்கும் இடையிலான முரண்பாட்டைத் தீர்த்து வைக்குமளவுக்கு கோடம்பாக்கத்தில் செல்வாக்கு மிக்கவர். கொழும்பில் வங்குரோத்தாகிய எதிரிசிங்க வணிகக் குழுமத்தை விலைக்கு வாங்கியவர். ஐந்து சிங்களப் படங்களில் அவர் முதலீடு செய்கிறார். அண்மையில் அவர் தனது மனைவியோடு சென்று மகாநாயக்க தேரர்களைச் சந்தித்தார். இலங்கையில் தனது சொத்துகளையும் முதலீட்டையும் பாதுகாப்பதற்கு அவருக்கு அது தேவையாக இருக்கலாம்.

சந்தோஷ் நாராயணன், ஹரிஹரன் போன்றவர்களின் இசை நிகழ்ச்சிகளுக்கு முதலீடு செய்வது புலம்பெயர்ந்த தமிழ் முதலீட்டாளர்கள். அவர்களும் போரின் விளைவுகள்தான். அவர்களும் ஈழத் தமிழ் ரத்தம்தான். அவர்கள் அந்நியர்கள் அல்லர். அவர்களோடு தமிழ்ச் செயற்பாட்டாளர்களும் கட்சிகளும் உரையாடவேண்டும். முதலாளிகள் எப்பொழுதும் இலாபத்தை நோக்கியே சிந்திப்பார்கள். அது அவர்களுடைய தொழில் ஒழுக்கம். ஆனால் அரசியல் செயற்பாட்டாளர்கள் அந்த முதலாளிகளை எப்படி ஆகக்கூடிய பட்சம் தேசியப் பண்பு மிக்கவர்களாக மாற்றுவது என்று சிந்தித்து உழைக்கவேண்டும். அதுதான் தேசிய அரசியல் ஒழுக்கம். அவர்களை எப்படித் தேச நிர்மாணத்தின் பங்காளிகளாக மாற்றுவது?

முதலில் ஈழத்தமிழர்கள் ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும். தோல்விகளுக்கும் பின்னடைவுகளுக்கும் பிறத்தியாரை எப்பொழுதும் குறை சொல்லிக் கொண்டிருக்கமுடியாது. ஈழத்தமிழர்களுக்காக ஈழத்தமிழர்கள்தான் போராட வேண்டும். தமிழகத்தவர்களோ அல்லது வெளிநாடுகளில் இருப்பவர்களோ எந்தளவுக்குப் போராடலாம் என்பதில் வரையறைகள் உண்டு. இந்த அடிப்படையில் சிந்தித்தால் ஈழத்தமிழர்கள் அல்லாதவர்களிடம் எதை எதிர்பார்க்கலாம்? எந்த அளவுக்கு எதிர்பார்க்கலாம்? என்பதில் பொருத்தமான விளக்கங்கள் இருக்கவேண்டும். உதாரணமாக ஒரு சிங்கள முற்போக்குவாதியிடம் அவர் தமிழ்த் தேசியவாதியாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கத் தேவையில்லை. அவர் இனவாதத்துக்கு எதிராக இருந்தாலே போதும். சிங்களத் திரைப்படக் கலைஞர் பிரசன்ன விதானகே எடுக்கும் படம், தமிழ் மக்களின் போராட்டத்தை ஆதரிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கத் தேவையில்லை. அது இனவாதத்தை எதிர்த்தாலே போதும். அதுவே தமிழ் அரசியலுக்கு வெற்றிதான்.

தமிழரல்லாத வேற்று இனத்தவர் ஒருவர் கட்டாயம் தமிழ்த் தேசியவாதியாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. அவர் தமிழ் மக்களின் நியாயத்தை ஏற்றுக் கொண்டாலே போதும்.

அப்படித்தான் தமிழகமும். தமிழகத்தில் இருப்பவர்கள் 100% ஈழத் தமிழ் அபிமானிகளாக இருக்கவேண்டும் என்றில்லை. அங்கே 19 பேர் தீக்குளித்து இறந்திருக்கிறார்கள் என்பது மகத்தானது. அதற்காக எல்லோரையும் தீக்குளிக்கக் கேட்கலாமா? அவர்கள் ஈழத் தமிழர்களுக்காக மாநில அரசாங்கத்தின் மீதும், மத்திய அரசாங்கத்தின் மீதும் அழுத்தங்களைக் கொடுத்தாலே அது மகத்தான விளைவுகளைத் தரும்.

புலம்பெயர்ந்த தமிழர்களிடம்கூட எதுவரை எதிர்பார்க்கலாம் என்பதில் வரையறைகள் உண்டு. ஏனெனில் அவர்கள் கள யதார்த்தத்துக்கு வெளியே வசிக்கின்றார்கள்.

**ஒருபுறம் புலம்பெயர் தமிழர்கள் தமிழகச் சினிமாப் பிரபல்யங்களை அழைத்து கோடிக்கணக்கில் காசைக்கொட்டிக் கொண்டாடுகிறார்கள். இன்னொரு புறம் நீதிக்கான போராட்டத்தின் ஈட்டி முனையாகவும் காணப்படுகிறார்கள். இந்த இரண்டும் கலந்ததுதான் புலம்பெயர்ந்த வாழ்வின் யதார்த்தம்.**

அவர்களை எப்படித் தேச நிர்மாணத்தின் பங்காளிகளாக மாற்றுவது என்றுதான் சிந்திக்கலாம்.

ஏன் அதிகம் போவான்? தாயகத்தில் சொந்தத் தமிழ் மக்களில் ஒரு தொகுதியினர் தமிழ்த் தேசிய அரசியற்பரப்புக்கு வெளியே நிற்கிறார்கள். டக்ளஸ் தேவானந்தாவுக்கும் அங்கஜனுக்கும் பிள்ளையானுக்கும் வாக்களித்தவர்களை எதிரிகளாகப் பார்க்கலாமா? அவர்கள் எங்களுடைய மக்கள் இல்லையா? அவர்களை எப்படித் தமிழ்த் தேசிய நீரோட்டத்துக்குள் ஈர்த்தெடுப்பது என்றுதானே சிந்திக்கவேண்டும்? தாயகத்திலேயே தமிழ்ச் சனத்தொகையில் ஒருதொகுதி தமிழ்த் தேசிய அரசியலுக்கு வெளியே நிற்கின்றது. அப்படியென்றால் தாயகத்துக்கு வெளியே நிலைமை எப்படியிருக்கும்? அவ்வாறு தமிழ்த் தேசிய அரசியலுக்கு வெளியே நிற்பவர்களை தமிழ்த் தேசிய நீரோட்டத்துக்குள் ஈர்த்தெடுப்பதுதான் தேசத்தைத் திரட்டும் அரசியல்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் ஒரு விதத்தில் தாயகத்தின் நீட்சியும் அகட்சியும் தான். ஆனால் அவர்கள்தான் தமிழக சினிமாப் பிரபல்யங்களை அழைத்து கோடிக்கணக்கான காசைச் செலவழித்து நிகழ்ச்சிகளை அரங்கேற்றி வருகிறார்கள். அண்மையில் கனடாவில் நடந்த சித் சிறீராமின் இசை நிகழ்ச்சிக்குரிய பட்ஜெட் 10 இலட்சம் கனேடிய டொலர் என்று கூறப்படுகிறது. குஷ்பு 2014 இல் கனடாவுக்குப்போனவர். மார்க்கம் ஏயர் மைதானத்தில் நடந்த அந்த நிகழ்வில் ஆயிரக்கணக்கானவர்கள் பங்கு பற்றினார்கள். அதில் அவருடைய ரசிகர்கள் அவருடைய காலில் விழுந்ததைத் தான் கண்டதாக ஒரு சமூகச் செயற்பாட்டாளர் சொன்னார்.

குஷ்பு ஒரு நடிகை மட்டுமல்ல. அரசியல்வாதியும் கூட. 2010 இல் அவர் தி.மு.க.வில் சேர்ந்தார். 2014 இல் அவர் காங்கிரஸில் சேர்ந்தார். 2020இல் அவர் பாரதிய ஜனதாவில் சேர்ந்தார். அதாவது இப்பொழுது அவர் ஆளுங்கட்சியில் இருக்கிறார். விடுதலைப்புலிகள் இயக்கத்தைப் பற்றிய அவருடைய கருத்தில் இப்பொழுது மாற்றங்கள் உண்டா என்று அவரிடம் கேட்க வேண்டும். தான் முன்பு சொன்னவற்றுக்காக அவர் மனம் வருந்துவாராக இருந்தால் அது தமிழ்த் தேசிய அரசியலுக்கு கிடைத்த வெற்றி. அவரைப் பகை நிலைக்குத் தள்ளுவதா? அல்லது அவரைக் கருத்து ரீதியாக வென்றெடுப்பதா? இதில் எது தமிழ்த் தேசியத் திரட்சிக்கு உதவும்?

2009 க்குப் பின் தமிழகத்தில் உள்ள இரண்டு பெரிய கட்சிகளும் ஈழத்தமிழ் அரசியலில் இருந்து விலகிச்செல்லும் போக்கு அதிகரித்துவரும் ஒரு பின்னணியில், ஈழத்தமிழ் நோக்கு நிலையிலிருந்து தமிழகத்தை எப்படிக் கையாள்வது என்ற அடிப்படையிலும் இது போன்ற விவகாரங்களை அணுகவேண்டும்.

ஒருபுறம் புலம்பெயர் தமிழர்கள் தமிழகச் சினிமாப் பிரபல்யங்களை அழைத்து கோடிக்கணக்கில் காசைக்கொட்டிக் கொண்டாடுகிறார்கள். இன்னொரு புறம் நீதிக்கான போராட்டத்தின் ஈட்டி முனையாகவும் காணப்படுகிறார்கள். இந்த இரண்டும் கலந்ததுதான் புலம்பெயர்ந்த வாழ்வின் யதார்த்தம். எனவே புலம்பெயர்ந்த தமிழ் முதலீட்டாளர்கள் தாயகத்தில் முதலீடு செய்யும் பொழுது அதனை கொழும்பு மைய நோக்கு நிலையில் இருந்து செய்வதற்குப் பதிலாக தேச நிர்மாணம் என்ற நோக்கு நிலையில் இருந்து செய்யுமாறு ஊக்குவிக்கவேண்டும். தாயகத்தில் உள்ள கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் கருத்துருவாக்கிகளும் புலம்பெயர்ந்த தமிழ்ச் செயற்பாட்டாளர்களும் அதை நோக்கி முதலீட்டாளர்களை ஊக்குவிக்க வேண்டும்.

2009 க்குப் பின் கைபேசியால் காட்டிக் கொடுக்கப்பட்ட நாடு இலங்கை. மே 18 க்கு பின் யுத்தகளத்தில் எடுக்கப்பட்ட எல்லா படங்களும் இலங்கை அரச படைகள் தமது கமராக்களினாலும் தமது கைபேசிகளாலும் எடுத்த படங்கள்தான். அந்தப் படங்கள்தான் பிந்நாளில் இலங்கைக்கு எதிரான போர்க் குற்றச் சான்றுகளாக மாறின. அதாவது கைபேசியால் காட்டிக்கொடுக்கப்பட்ட ஒரு நாடு. அதுபோலவே ஈழத் தமிழர்களும் 2009க்கு பின் சமூக வலைத்தளங்களால், கைபேசிச் செயலிகளால் சிதறடிக்கப்பட்ட ஒரு தேசிய இனமாக மாறி வருகிறார்கள். ஈழத் தமிழர்கள் ஒருவர் மற்றவருக்கு எதிராக அள்ளி வீசும் அவதூறுகளால் தேசம் சிதறிக் கொண்டே போகிறது. சமூக வலைத்தளங்களால் சிதறடிக்கப்பட்ட ஒரு தேசம்? இனப்படுகொலையால் புலப்பெயர்ச்சியால் மெலிந்து சிதறிய ஒரு சிறிய தேசம். சமூக வலைத்தளங்களில் மேலும் மேலும் சிதறிக் கொண்டு போகிறது. யாதும் ஊராகப் புலம் பெயர்ந்து விட்டோம். ஆனால் யாவரும் கேளிரா? அதாவது யாவரும் சொந்தங்களா? தீதும் நன்றும் பிறர் தருவதில்லை. நாமே நமக்குத் தேடிக் கொள்பவையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவை ஏன் எதிர்க்க வேண்டும்?

அ.நிக்ஸன்




ரஷ்ய - சீனக் கூட்டை மையப்படுத்திய பிறிக்ஸ் நாடுகளின் மொத்த வர்த்தகத்தின் மதிப்பு 1.14 ரில்லியன் அமெரிக்க டொலர் என்று சர்வதேச நாணய நிதியத்தின் ஓகஸ்ட் மாத அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியா உள்ளடங்கலாக பிரேசில், ரஷ்யா, சீனா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய ஐந்து நாடுகளை மையப்படுத்தியே அறிக்கை வெளியாகியுள்ளது. இந்திய வர்த்தக முறைகளும் இந்தியாவின் பங்களிப்பும் பிறிக்ஸ் கூட்டமைப்புக்குள் பிரதானமானது எனவும் சீன. இந்திய வர்த்தகச் செயற்பாடுகள் பிறிக்ஸ் கூட்டமைப்புக்குள் அதிகரித்த நிலையில் இருப்பதாகவும் புள்ளி விபரங்கள் காண்பிக்கின்றன. இதன் காரணமாக பிறிக்ஸ் நாடுகள் உலகளவில் புறக்கணிக்க முடியாத சக்தியாக உருவெடுத்துள்ளதாக 'சின் ஹுவா' செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்தியாவின் வர்த்தகப் பங்களிப்பு பற்றியும் இந்தச் செய்தி நிறுவனம் விபரிக்கிறது. ஆகவே சீன = இந்திய வர்த்தக உறவுக்குப் பிரச்சினை இல்லை என்பது தெளிவாகிறது. இந்திய அரச செய்தி நிறுவனங்களும் சீன= இந்திய வர்த்தகச் செயற்பாடுகளை பாராட்டியிருக்கின்றன.

**இந்தியா - சீனா இடையே வலுப்பட்டுவரும் உறவுகள்!**

இந்தோ- பசுபிக் பிராந்தியத்தில் இந்தியாவுடன் சீனாவுக்குப்போட்டியில்லை. பிராந்தியத்துக்குச் சம்பந்தப்படாத அமெரிக்கா மாத்திரமே இப்போது சீனாவின் நேரடிப் போட்டியாளர் என்று சீனாவின் அதிகாரபூர்வ செய்தி நிறுவனமான குளோபல் ரைம்ஸ் புவிசார் அரசியல் பொருளாதார விமர்சனங்கள் ஒவ்வொன்றிலும் கருத்துக்களை முன்வைத்து வருகிறது. இந்தியாவுடன் சீனாவுக்கு இருப்பது எல்லைப் பிரச்சினை மாத்திரமே என்றும் குளோபல் ரைம்ஸ் வர்ணிக்கிறது. அதேநேரம் இந்தியாவில் நூற்று ஐம்பது சீன நிறுவனங்கள் இயங்குகின்றன. அவை இந்தியாவில் செய்துள்ள முதலீடு மட்டும் எட்டு பில்லியன் டொலராகும். இதனால் இரண்டு லட்சத்துக்கும் அதிகமான வேலை வாய்ப்புகள் இந்திய மக்களுக்குக் கிடைத்துள்ளதாக புதுடில்லியில் உள்ள சீனத் தூதரகம் தெரிவிக்கிறது.

சீனாவுக்கு இந்தியா செய்யும் ஏற்றுமதி கடந்த ஐந்து ஆண்டுகளில் இருபது சதவீதம் அதிகரித்துள்ளது. சீனாவில் இருக்கும் இந்தியர்களின் எண்ணிக்கை 2020 ஆம் ஆண்டு மதிப்பீட்டின் பிரகாரம் சுமார் நாற்பத்து ஐயாயிரம். அதில் இருபதாயிரம் பேர் மாணவர்கள். சீனப் பொருடள்களை அதிக அளவில் இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா ஏழாவது இடம் வகிக்கிறது. சீனாவில் இருந்து. அதிகப்படியான உரம், ரசாயனம், எதிர்ப்பு சக்தி மருந்துகளை இந்தியா இறக்குமதி செய்கிறது. அத்துடன் ஏழு இந்திய வங்கிகள் சீனாவில் கிளைகளைத் திறந்துள்ளன. சீனாவின் கைத்தொழில் வர்த்தக அபிவிருத்தி வங்கி மும்பையில் ஒரு கிளையைத் திறந்துள்ளது. இந்திய சீன வர்த்தகத்தை மேம்படுத்த, சீனாவில் இருந்து இந்தியா வருபவர்களுக்கு 2017இல் இருந்து இலத்திரனியல் அடையாள அட்டை முறையை இந்தியா அறிமுகம் செய்துள்ளது. இந்திய= சீன வர்த்தகம் 2000ஆம் ஆண்டில் இருந்து மூன்று பில்லியன் டொலராக அதிகரித்து, 2008இல் 52 பில்லியன் டொலராகவும் 2011இல் 73.9 பில்லியன் டொலராகவும் 2018இல் இருந்து 90 பில்லியன் டொலராவும் உயர்வடைந்துள்ளது. தற்போது இதன் எண்ணிக்கை இரண்டு மடங்குகளாக அதிகரித்துள்ளதாக புதுடில்லியில் உள்ள சீனத் தூதரக இணையத்தின் வர்த்தக உறவுகள் தொடர்பான பகுதியில் விபரிக்கப்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டில் சீன அதிபர் ஜின் பிங் இந்தியாவுக்குச் சென்றபோது ரயில்வே, விண்வெளி, மருந்து, தொழில்நுட்ப பூங்கா போன்றவற்றை மேம்படுத்த பதினாறு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

2015இல் நரேந்திர மோடி சீனா சென்ற போது, இரு நாள்களுக்கு இடையே இருபத்து நான்கு ஒப்பந்தங்களும், இரு நாட்டு நிறுவனங்களுக்கு இடையே இருபத்து ஆறு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகின. 2016ஆம் ஆண்டில் அப்போதைய இந்தியக் குடியரசு தலைவர் பிரணாப் முகர்ஜி சீனா சென்றபோது உயர்கல்வி தொடர்பாக பத்து ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. 2018இல் சீனாவின் யூஹானில் பிரதமர் மோடி, ஜி ஜிங்பிங்கை சந்தித்தார். இதன் தொடர்ச்சியாகவே தமிழகம் மாமல்லபுரம் சந்திப்பை அவதானிக்க முடியும். இதன் தொடர்ச்சியாக 2023 இல் பிறிக்ஸ் மாநாட்டோடு வர்த்தக உறவு மேலும் விரிவடைந்துள்ளது.

**இலங்கையில் சீனா; இந்திய எதிர்ப்பு ஏன்?**

ஆகவே சீனாவுடன் நல்லுறவுகளைப் பேணிக் கொண்டு, இலங்கை, மியான்மர் போன்ற நாடுகளில் சீனா மேற்கொண்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களை இந்தியா ஏன் ஓரக் கண்ணால் பார்க்கிறது? என்ற கேள்வி எழாமலில்லை. சீனா, இலங்கைக்கு வழங்கும் உதவிகளை இந்தியாவால் தடுக்கவும் முடியவில்லை. இலங்கையும் இந்தியாவின் அழுத்தங்களுக்கு மத்தியில் தொடர்ந்தும் சீனாவிடம் இருந்து தேவையான உதவிகளைப் பெறுகிறது. இலங்கைத்தீவில் சீனாவுக்கு தேவையான நிலங்களையும் குத்தகைக்கு வழங்கி வருகிறது. சீன உதவிகள் என்பது இலங்கையின் உள்ளக விவகாரம் என்று இந்திய இராஜதந்திரிகள் அவ்வப்போது பட்டும் படாமலும் கூறியுமிருந்தனர். இரண்டாயிரத்து முந்நூற்று முப்பது ஹெக்ரேயர் கடல் பரப்பை மூடி 2014இல் ஆரம்பிக்கப்பட்ட கொழும்பு போர்ட் சிற்றி திட்டம்கூட இந்தியாவின் பாதுகாப்புக்குப் பிரச்சினை இல்லை என்று இந்தியா அப்போது கூறியிருந்தது.

சீனாவிடம் இருந்து நிதியுதவி பெறுவதையோ இலங்கையில் சீனா மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியோ இந்தியா கேட்க வேண்டிய அவசியம் இல்லை என்று முன்னாள் பிரதமர் ரட்ண சிறி விக்கிரமரட்ன 2010இல் நாடாளுமன்றத்தில் தெளிவாக எச்சரித்துமிருந்தார். இலங்கையில் சீனத் திட்டங்களுக்கு எதிர்ப்பு வெளியிடுவதைவிட இந்தியத் திட்டங்களுக்கு மாத்திரமே சிங்கள அமைப்புகளும் பௌத்த குருமாரும் கடும் எதிர்ப்பு வெளியிடுகின்றனர். சிங்கள அரசியல் தலைவர்களும் சீனாவுக்கே முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர்.

இருந்தாலும் சீனாவின் செல்வாக்கு இலங்கையில் அதிகரித்து வருவதையிட்டு இந்தியா சில வருடங்களாக அதுவும் கடந்த சில மாதங்களாக அதிகளவு கவலையடைந்துள்ளமை பகிரங்கமாகி வருகின்றது. குறிப்பாக வடக்கு= கிழக்கில் சீனா மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியே இந்தியா அதிகளவு கவலை கொண்டுள்ளதுபோல் தெரிகிறது. ஆனால் சீன = இந்திய வர்த்தகம் உலகில் முன்னணியாக இருக்கும் நிலையில் இலங்கைத்தீவில் அதுவும் வடக்கு= கிழக்கில் சீனா மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்களை மாத்திரம் இந்தியா விரும்பாமல் இருப்பதன் பின்னணி என்ன? எதிர்ப்பை நேரடியாக வெளிக்காட்டாமல் மறைமுகமாக அல்லது வேறு அழுத்தங்கள் மூலம் இந்தியா தனது விருப்பமின்மையை உணர்த்தி வருகிறது.

2009 மே மாதத்துக்கும் பின்னரான சூழலில் = பதினான்கு வருடங்கள் சென்றுவிட்ட நிலையிலும்கூட= ஈழத் தமிழர்களின் அரசியல் தீர்வு விவகாரத்துக்கு நிரந்தத் தீர்வு ஏற்படாத ஒரு நிலையில், குறைந்த பட்சம் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தைக்கூட நடைமுறைப்படுத்த முடியாத ஒரு சூழலில் சீன அபிவிருத்திகளை இந்தியா விரும்ப மறுப்பதன் அடிப்படைக் காரண காரியங்கள் எவை? கொழும்பு போர்ட் சிற்றி தொடர்பான பேச்சுகள் 2011இல் ஆரம்பித்து 2014இல் ஒப்பந்தம் கைச்சாத்திட்டபோதுகூட இந்தியத் தேசிய பாதுகாப்புக்கு அது அச்சுறுத்தல் இல்லை என்று மார்தட்டிய இந்தியா, தற்போது இந்தியத் தேசிய பாதுகாப்புக்கு அது அச்சுறுத்தல் என்ற தொனியில் பேச ஆரம்பித்திருக்கிறதல்லவா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழர்களின் அபிலாஷைகளை கொஞ்சமும் புரியாத இந்தியா**

ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலைக்குரிய நிலையான தீர்வை ஏற்படுத்தினால் மாத்திரமே இந்தியாவுக்குப் பாதுகாப்பு என்று தமிழ்த் தேசியக் கட்சிகள் 2009 க்குப் பின்னரான சூழலில் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டி வருகின்றன. இதை சம்பந்தன் தனது நாடாளுமன்ற உரையில் பகிரங்கமாக விபரித்துமிருக்கிறார். ஆனால் அது பற்றி இந்தியா கவனத்தில் எடுக்கவில்லை. போரில் தோல்வி கண்ட தமிழ்ச் சமூகத்தின் அரசியல் பிரதிநிதிகளின் கருத்துகள் முக்கியமானவையல்ல என்ற பார்வையில் செயற்பட்டு சிங்கள ஆட்சியாளர்களை மாத்திரம் நம்பிச் செயற்பட்ட இந்தியா, தற்போது வடக்கு=கிழக்கில் சீனா மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்களை ஏன் பின்கதவால் எதிர்க்க வேண்டும்?

வடக்கு - கிழக்கில் தமிழர்களின் பாரம்பரியக் காணிகளை துண்டு துண்டாக்கி நிலத் தொடர்பற்ற தமிழ் சமூகமாக மாற்ற வேண்டும் என்ற நோக்கில் 1949இல் திருகோணமலையில் தஆரம்பிக்கப்பட்ட கல்லோயா திட்டத்தின் நோக்கங்கள் 2009 க்குப் பின்னரான சூழலில் தீவிரமாக முன்னெடுக்கப்படுகிறது. வடக்கு= கிழக்கு 'தமிழர் தாயகம்' என்ற கோட்பாட்டை உடைக்கவே அபிருத்தி என்ற போர்வையில் சீனாவுக்கு நிலங்கள் கையளிக்கப்படுகின்றன. கிழக்கு மாகாணத்தில் அமெரிக்க= இந்திய அரசுகளுக்கு இலங்கை கையளித்துள்ள நிலங்கள், இயற்கைத் துறைமுகங்கள்கூட அதன் அடிப்படைதான்.

ஆகவே தமிழர்களின் பாரம்பரிய நிலங்கள் துண்டாடப்படும் என்ற நோக்கில் சீன அபிவிருத்தித் திட்டங்களை இந்தியா விரும்பவில்லையா? அல்லது தமிழர் பிரதேசங்களில் இந்தியாவின் புவிசார் அரசியல் பொருளாதார நோக்கங்களுக்கு அது ஆபத்து என்ற நோக்கிலா? 2009 க்குப் பின்னரான சூழலில் இருந்து இன்றுவரையும் தமிழர் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பௌத்த மயமாக்கல் திட்டங்களை ஏன் இந்தியா எதிர்க்கவில்லை? கண்டிக்கவில்லை?

எந்த எதிரி நாடென்றாலும் தமிழர் பிரதேசங்களை அபிவிருத்தி செய்தால் நல்லது என்ற 'ஒற்றைச் சிந்தனை' மாத்திரம் தற்போது தமிழ் மக்களிடம் உருவாகக் கூடிய பரிதாபகரமான நிலைமை உண்டு. ஏனெனில் 2009இல் போருக்கு ஒத்துழைத்த அமெரிக்க = இந்திய அரசுகளும் சீனாவும் சிங்களத் தலைவர்களுடன் மாத்திரம் பேச்சு நடத்தும் நிலையில் கொழும்பின் அனுமதி ஊடாக வரும் அபிவிருத்தித் திட்டங்களை தமிழர்கள் எதிர்க்க வேண்டும் என எந்த வல்லரசு நாடுகளும் எதிர்பார்க்கவே முடியாது.

தமிழீழம் அமைந்தால் அதனை முதலில் எதிர்ப்பது சீனாதான் என்று 1979இல் கொழும்பில் இருந்த சீனத் தூதுவர், பேராசிரியர் வில்சனிடம் அப்போது கூறியிருந்தார். 1983இல் ஈழத் தமிழர்களின் அரசியல் போராட்டத்தை இந்தியா ஆதரித்திருக்கும். ஆனால் 'ஈழத் தமிழர் சுயநிர்ணய உரிமை' என்பதை அங்கீகரிக்க முடியாதென அப்போது பிரதமராக இருந்த இந்திரா காந்தி தன்னிடம் கூறியதாக கவிஞர் புலமைப் பித்தன் 2008இல் வழங்கிய நேர்கணாலில் தெளிவாக விளக்கி யுள்ளார். ஆகவே 1979இல் தமிழீழம் என்பதற்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டிருந்த சீனா 2009 க்குப் பின்னரான சூழலில் வடக்கு -கிழக்கில் அபிவிருத்தி என்ற போர்வையில் தனக்குரிய புவிசார் அரசியல் தேவைகளை நிறைவேற்றுகின்றது என்பது பகிரங்கம்.

எனவே ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலை உணர்வுகளை அமெரிக்க -இந்திய அரசுகள் புரிந்துகொள்ளும் வரை, தமிழ்த் தேசியக் கட்சிகள் சீன அபிவிருத்தித் திட்டங்களை எதிர்க்க வேண்டிய தேவை இல்லை. ஆனால் சுயமரியாதையோடு நின்றுபிடிக்கக்கூடிய அரசியல் தலைமை ஒன்று உருவாக வேண்டும்.





○ ஆர்.பிரகாஷ்

# கிரிக்கெட்டின் மகுடம் யாரிடம்?

உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் இன்று பலப்பரீட்சை நடத்தவிருக்கின்றன. உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மைதானமாக அறியப்படும் அஹமதாபாத் மைதானத்தில், சுமார் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ரசிகர்கள் முன்னிலையில், பிரபலங்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் திரண்டிருக்க இந்த இறுதியாட்டம் இடம்பெறவிருக்கின்றது.

### இந்தியத் துடுப்பாட்டம்

உலகக்கிண்ணத் தொடர் ஆரம்பித்த நாள்முதல் இந்திய அணி அசுர பலம்மிக்க அணியாகவே திகழ்ந்து வருகின்றது. எதிர்கொண்ட அத்தனை ஆட்டங்களிலும் வெற்றி பெற்று ஓர் ஆட்டத்திலேனும் தோல்வியடையாத அணியாக வலம் வருகின்றது இந்திய அணி. இன்னும் சொல்லப்போனால், தொடரின் முதலாவது ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராகப் பெற்ற சற்றுச் சிரமமான வெற்றிதான் இந்தத் தொடர் முழுவதும் இந்திய அணி இதுவரை எதிர்கொண்ட ஒரேயொரு சவாலான ஆட்டம். மற்றைய அத்தனை ஆட்டங்களிலும் எதிரணிகள் எதிர்த்துப்போராடாத அளவுக்கு அந்த அணிகளை சுருட்டி வீழ்த்தியுள்ளது ரோகித் படை.

இந்த உலகக்கிண்ணத் தொடரில் அசுரப்பலமான அணியென்றால் அது இந்தியாதான். துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என்று அனைத்துத் துறைகளிலும் அந்த அணி சமநிலை கொண்டதாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. துடுப்பாட்டத்தில் எந்தச் சுயநலமும் இல்லாமல் தனிப்பட்ட பெறுபேற்றைக் கணக்கில் கொள்ளாமல் அடித்தாடி அசுரத்தனமான ஆரம்பத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார் அணித்தலைவர் ரோகித் சர்மா. சுப்மன் கில் ரோகித்துக்குப் பக்கபலமாகவும், சமநேரத்தில் தனித்தும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றார்.

மூன்றாம் நிலை வீரரான கோலி, தன் வாழ்நாள் திறனில் தற்போதிருக்கின்றார். இதவரை 700க்கும் மேற்பட்ட ஓட்டங்களை அவர் குவித்துள்ளார். சச்சினின் சாதனை முறியடிப்பு என தனிப்பட்ட பெறுபேற்றிலும், அணிக்கான ஒத்துழைப்பிலும் கோலிக்கு இது பொற்காலம். அடுத்தடுத்த வீரர்களான ஸ்ரேயஸ் மற்றும் ராகுல் இருவரும் தருணத்துக்கு ஏற்றாற்போல் ஆடுவதில் வல்லவர்களாகத் திகழ்கின்றனர். அணியின் சமநிலையை அவர்களே பேணுகின்றனர் தக்க வைக்கின்றனர். துடுப்பாட்டத்தில் ஜடேஜா தனித்து எந்தக் கவனத்தையும் பெறவில்லை. ஆனால், அவர் மூன்று இன்னிங்ஸில்தான் இதுவரை களமிறங்கியுள்ளார். அவற்றிலும் ஒட்டுமொத்தமாக 100க்கும் மேற்பட்ட ஓட்டங்களைப் பெற்றுள்ளார். சராசரி 50க்கும் அதிகம். ஆக, துடுப்பாட்டத்தில் தளம்பலற்ற அணியாக இந்தியா விளங்குகின்றது.

### இந்தியப் பந்துவீச்சு

பந்துவீச்சில் இதற்கு முன்பு ஒருபோதும் காணாத இந்திய அணியை இப்போது உலகம் கண்டுகொண்டிருக்கின்றது. இதுவரை 10 ஆட்டங்களில் விளையாடியுள்ள இந்திய அணி 100 விக்கெட்டுகளில் 96 விக்கெட்டுகளை வீழ்த்தியிருக்கின்றது. இலங்கை அணியை இரு தடவைகள் 50 மற்றும் 55 ஓட்டங்களில் கடந்த இரண்டு மாதங்களுக்குள் கட்டுப்படுத்தியிருக்கின்றது. தென்னாபிரிக்க அணியை 90 ஓட்டங்களுக்குள் ஒரு தடவை கட்டுப்படுத்தியுள்ளது. இதற்கெல்லாம் மொகமட் சமியின் அபரிமிதமான பந்துவீச்சே முக்கியமான காரணம். பரீட்சைக்குத் தயார்ப்படுத்தப்பட்டவிடயப்பரப்புகளுக்குப் புறம்பான பகுதிகளில் வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களின்மன அமைதியைக் கெடுப்பதுபோல்தான் மொகம்மட் சமியின் அண்மைக் காலப் பெறுபேறு. வேகத்தில் பும்ரா, சுழலில் ஜடேஜா இவ்விருவருக்கும் எதிராகத்தான் பிரதானமான தயார்ப்படுத்தல்களை எதிரணிகள் மேற்கொண்டன. ஆனால், அனைத்து அணிகளுக்கும் தற்போது தொல்லையாக மாறியிருப்பவர் சமி. 7 ஆட்டங்களில் 23 விக்கெட்டுகளை அவர் வீழ்த்தியிருக்கின்றார். 18 இலக்குகள் பும்ராவால் சாய்க்கப்பட்டிருக்கின்றன. புதிய் பந்தில் கெத்துக் காட்டுகின்றார் சிராஜ். ஜடேஜா விட்டுக்கொடுக்கும் ஓட்டச்சராசரி 3.9ஆகவே இருக்கின்றது. இதுவொரு டெஸ்ட் பெறுபேறு. அத்துடன் அவர் 16 விக்கெட்டுகளையும் கைப்பற்றியிருக்கின்றார். ஆனால், பாண்டியாவின் காயத்துக்குப் பின்னர், ஆறாவது பந்துவீச்சுத் தெரிவு இந்தியாவிடம் இல்லை. இது பெரும் பலவீனம்.

### இந்தியக் களத்தடுப்பு

ஆசியக் கிண்ணத் தொடருடன் ஒப்படுகையில் உலகக்கிண்ணத் தொடரில் இந்திய அணியின் களத்தடுப்பு வலுவாகவே மேம்பட்டிருக்கின்றது. ஆனால், இந்திய அணியின் களத்தடுப்பென்பது நிச்சயமற்றதொன்று. முக்கியமான நேரங்களில் பிடியெடுப்பைத் தவறவிடுவதை 'காலாகாலத் தவறாக' இந்திய அணி செய்து கொண்டிருக்கின்றது. இந்தத் தொடரில் சில ஆட்டங்களில் அது எதிரொலிக்கவும் செய்தது. நியூஸிலாந்துக்கு எதிரான அரையிறுதியிலும்கூட வில்லியம்சனின் பிடியெடுப்பை மிக இக்கட்டான நேரத்தில் தவறவிட்டார் சமி. இந்தத் தவறுகளை இந்தியா சரிசெய்ய வேண்டியிருக்கின்றது. அதேநேரம், பந்தை விரட்டுவதில் இந்திய வீரர்கள் வல்லவர்கள். இந்த நுட்பத்தால் மட்டும் அவர்கள் குறைந்தது 10 - 20 ஓட்டங்களை மீதப்படுத்துகின்றார்கள்.

### ஆஸியின் துடுப்பாட்டம்

அவுஸ்திரேலிய அணியைப் பொறுத்தவரை, அந்த அணிக்கு இந்தத் தொடர் ஓர் உளவியல் போர். பந்தைச் சேதப்படுத்தியமைக்காக கிரிக்கெட் அரங்கிலிருந்து தனிமைப்படுத்தப்பட்ட ஆஸிக்கு, அதன் பின்னர் தொட்டதெல்லாம் சறுக்கல்தான். ஆஷஸ் உள்ளிட்ட ஓரிரு வெற்றிகள் கிடைத்தாலும், அவை அவுஸ்திரேலியப் பாணியிலான வெற்றியல்ல. இவையெல்லாவற்றையும் உடைத்து ஒரு மறுவருகையை நிகழ்த்துவதற்கு ஆஸிக்கு இந்த உலகக்கிண்ணம் தேவைப்படுகின்றது. ஆரம்ப வீரர் வோர்ணர் திறனில் இருக்கின்றாரா? இல்லையா? என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. எழுச்சியும் வீழ்ச்சியுமாகச் செல்கின்றது அவரின் ஆட்டம். ஆனால், அவுஸ்திரேலிய முன்வரிசையின் பெரும் பலமாக மார்ஷ் இருக்கின்றார். ஆஸியின் ஓட்டக்குவிப்பைத் தாங்கிச் செல்கின்றார் அவர். சிமித், லபுஷேன் இருவரும் இதுவரையும் பெரிய இன்னிங்ஸ்களை ஆடவில்லை. ஆனாலும் அணிக்குத் தம்மாலான பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கின்றனர். மக்ஸ்வெலின் மிரட்டலான ஆட்டம் ஆஸியின் பெரும் பலம். இந்தியாவுக்கு அச்சுறுத்தலும் அவரே. தனிநபராக அவர் ஆட்டத்தை மாற்றவல்லவர். ஆதலால், இந்தியாவின் தலைக்குமேல் எந்நேரமும் கத்தியொன்று தொங்கிக் கொண்டிருக்கும்

### ஆஸியின் பந்துவீச்சு

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி பலமில்லாமல் இருந்ததாகச் சரித்திரம் இல்லை. முதலாவது ஓவரில் விக்கெட்டை வீழ்த்திக் கொடுக்கும் ஸ்ராக், சராசரியைக் கட்டுப்படுத்தும் ஹேசில்வூட், சுழலில் சாம்பா என்று நல்ல நிலையில் ஆஸி இருக்கின்றது. இந்தியாவுக்கு அடுத்தபடியாக நல்லதொரு பந்துவீச்சுக் கூட்டணியைக் கொண்ட அணியாகவும் ஆஸி உள்ளது. இதேவேளை, குறிப்பிடத்தக்க விடயமாக ஆறுக்கும் மேற்பட்ட பந்துவீச்சுக் கூட்டணி ஆஸியிடம் உள்ளது. ஸ்ராக், ஹேசில்வூட், சாம்பா, கம்மின்ஸ், மக்ஸ்வெல், ஹெட் என அமைந்துள்ளது அந்தக் கூட்டணி.

### ஆஸியின் களத்தடுப்பு

களத்தடுப்பில் ஆவுஸ்திரேலியர்களுக்கு நிகர் அவர்களே. பிடியெடுப்புகளை அவர்கள் அவ்வளவு இலகுவில் தவறவிடமாட்டார்கள். மக்ஸ்வெல், வோர்ணர் என கூடுதலான மைதானப் பரப்பை காக்கக்கூடிய வீரர்களும் ஆஸியில் உள்ளனர். ஐந்து தடவைகள் சம்பியனான அந்த அணி ஆறாவது கிண்ணக் கனவுடன் இன்று கால் வைக்கின்றது. அதை முழுவதுமாக எதிர்த்து தன் மூன்றாவது கிண்ணத்துக்காக முன்னேறுகின்றது இந்தியா. பார்க்கலாம் கிரிக்கெட்டின் மகுடத்தை ஏந்தப்போவது ஆஸியா? அல்லது இந்தியாவா? என்பதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல பயங்கரவாதமும் கெட்ட பயங்கரவாதமும்

*டெய்லி மிரர் பத்திரிகையின் பத்தி எழுத்தாளர், ரங்க ஜெயசூரிய 'நல்ல பயங்கரவாதமும் கெட்ட பயங்கரவாதமும்' என்ற தலைப்பில் அண்மையில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இது தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தையும், ஹமாஸையும் ஒப்பிட்டு நோக்கும் சிங்களப் பேரினவாத நோக்குநிலையை வெளிப்படுத்தவே இந்தக் கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகின்றது. இந்தக் கட்டுரையின் கருத்துகள் 'உதயன்- சஞ்சீவியின்' கருத்துகள் அல்ல.*

தமிழாக்கம்: ந.பரமேஸ்வரன்

பலஸ்தீனத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் இஸ்ரேல் மேற்கொண்டு வரும் தாக்குதல்கள் நடுநிலை செயற்பாட்டாளர்களை, பாதிக்கப்பட்டவர்கள் மீது அனுதாபம் கொள்ளவைக்கும். பலஸ்தீனர்களின் அதிகபட்ச கோரிக்கைகள் தொடர்பில் சொல்லத்தேவையில்லை. அகதிகள் இஸ்ரேலுக்குத் திரும்புவதற்கான உரிமையையே அவர்கள் திரும்பத்திரும்ப வலியுறுத்துகின்றனர். ஆனால், அது இஸ்ரேலின் இனப்பரம்பலில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதே இஸ்ரேலின் விவாதம்.

குடும்பங்கள் உயிருடன் எரிக்கப்பட்டமை, சிறுவர்கள் வெட்டிக் கொல்லப்பட்டமை, களியாட்ட இசை நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் படுகொலை செய்யப்பட்டமை போன்ற காட்டுமிராண்டித்தனமான சம்பவங்களை சில இடங்களில் கொண்டாடுகிறார்கள். இதனை எவருமே ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) தவிர. இது புரட்சி என்ற பெயரில் எழுதப்பட்ட, எழுதப்படாத வன்முறைப் பிரகடனங்கள். மாவோ முதல் ஐ.ஆர்.ஏ.வரை சகல புரட்சிக்குழுக்களும் இதனை வன்முறை என ஏற்றுக்கொள்ளவில்லை. தமது நோக்கத்தை அடைவதற்கு வன்முறைதான் தீர்வு எனக் கருதினார்கள். உண்மையில் சொல்லப்போனால் அப்பாவிகள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வெறுப்பு என்றும் சொல்லலாம்.

இரண்டு தசாப்தங்களாக இனப்பிரச்சினை உள்ள ஒரு நாட்டில் பயங்கரவாதச் செயற்பாடுகளை அறிக்கையிட்ட ஓர் ஊடகவியலாளனாக புலிகளின் செயற்பாடுகளுடன், ஹமாஸ் இஸ்ரேலின் புறநகரான கிபுட்ஸ் மீது நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலை ஒப்பிட்டுப் பார்க்கையில் புலிகள் எல்லைப்புறக் கிராமங்களில் நடத்திய தாக்குதல்களைப்போல் பிரமாண்டமான அளவில் ஹமாஸ் நடத்தியுள்ளமை தெளிவாகின்றது. ஒரு சராசரி இலங்கையனாக இந்த இரண்டு வன்முறைகளையும் பார்த்தால் காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை, மத்திய வங்கி குண்டு வெடிப்பு, ஸ்ரீ மகாபோதி படுகொலை, ஹபரணை பஸ் படுகொலை, பேலியகொட படுகொலை, தெஹிவளை புகையிரதக் குண்டு வெடிப்பு போன்ற தாக்குதல்களை ஒரே நாளில் ஹமாஸ் நடத்தியுள்ளது.

ஐ.நா.வில் ஜோர்தானால் வரையப்பட்டு கனடா கொண்டுவந்த ஹமாஸின் தாக்குதலை நேரடியாக கண்டிப்பதுடன் காஸாவில் யுத்த நிறுத்தம் அறிவிக்கப்படவேண்டும் என்ற தீர்மானம் தொடர்பாக இடம்பெற்ற வாக்கெடுப்பில், குறித்த தீர்மானத்துக்கு ஆதரவாக இலங்கை வாக்களித்தது.

இஸ்ரேல் - பலஸ்தீனர்களை நடத்தும் விதம் தொடர்பாக இலங்கை வாக்களித்தது சரியே. ஆனால் ஹமாஸின் பயங்கரவாதச் செயற்பாடுகள் தொடர்பான தீர்மானத்துக்கு, அதாவது ஆயிரத்து 400 பொதுமக்களைக் கொன்றுகுவித்த பயங்கரவாதக்குழுவை எதிர்த்து 220 பணயக் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று முன்மொழியப்பட்ட கோரிக்கையை எதற்காக ஆதரிக்கவில்லை என்பதை அரசாங்கம் நாட்டு மக்களுக்கு விளக்க வேண்டும்.

மிலேச்சத்தனமான ஒரு பயங்கரவாதத் தாக்குதலை கண்டிக்க மறுப்பதென்பது, பாதிக்கப்பட்டவர்களை அவமதிப்பதுடன் இந்த நாட்டில் பயங்கரவாத வன்முறையில் கொல்லப்பட்ட எமது சொந்தங்களையும் அவமதிப்பதாகும். ஹமாஸை கண்டிப்பது உடனடி மனிதாபிமான யுத்த நிறுத்த தீர்மானத்தை ஆதரிப்பதை தடுத்திருக்கமாட்டாது. உதாரணமாக, இந்தியா இந்தத் திருத்தத்தை ஆதரித்தது. அது தோற்கடிக்கப்பட்டபோது, முக்கியமான தீர்மானத்துக்கு வாக்களிப்பதில் இருந்து இந்தியா விலகியிருந்தது.

ஒக்ரோபர் 7ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதலுக்கு இலங்கை தனது சீற்றத்தை வெளிப்படுத்தியிருக்கவேண்டும். அதேவேளை உடனடி யுத்த நிறுத்தத்துக்கு அழைப்பு விடுக்கும் தீர்மானத்துக்கும் ஆதரவளித்திருக்கமுடியும். எல்லாவற்றுக்கும் மேலாக, பயங்கரவாதம் எங்கு வெளிப்பட்டாலும் அதைக் கண்டிக்கும் தார்மீகப் பொறுப்பும் சுயநலமும் இலங்கைக்கு உண்டு. சில நாடுகள், வெவ்வேறு காலங்களில், 'நல்ல பயங்கரவாதிகள்' என்று கருதிய ஒரு பயங்கரவாதக் குழுவின் கைகளில் சிக்கி நாமே நீண்டகாலமாக பயங்கரவாதத்துக்குப் பலியாகியுள்ளோம். எல்லைக்கிராமங்களில் சிங்கள மக்கள் படுகொலை செய்யப்பட்டபோது அதை கண்டிப்பதற்குப் பதிலாக புலிகளுடன் பேச்சு நடத்தும்படி பல நாடுகள் வலியுறுத்திய சூழ்நிலையை சிந்தித்துப்பாருங்கள். நாங்கள் அந்தப்பாதையில் பல தடவைகள் பயணித்துள்ளோம்.

அந்தப்பயங்கரமான காலம் மீண்டும் வரமாட்டாது என்பதற்கு எந்தவித உத்தரவாதமுமில்லை. நீங்கள் பாதுகாப்பாக இருப்பதாக நினைக்கலாம். ஆனால் உங்களது பாதுகாப்பு வெற்றிடத்தைப் பயன்படுத்தி, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் போன்ற தாக்குதல்களை நிகழ்த்துவதற்கு பயங்கரவாதிகளுக்கு வாய்ப்புகள் அதிகம். பயங்கரவாதிகளை பயங்கரவாதிகள் என அழைப்பது அவர்களது நோக்கங்கள் இலக்குகளுக்காக அல்ல, தமது இலக்குகளை அடைவதற்கு அவர்கள் மேற்கொள்ளும் செயற்பாடுகளுக்காகவே. அவர்கள் பொதுமக்களை இலக்கு வைத்து தாக்குதல்களை மேற்கொள்வதன்



காரணமாகவே பயங்கரவாதிகள் என அழைக்கப்படுகிறார்கள். எமது சொந்த அனுபவத்தின் அடிப்படையில் இஸ்ரேலால் பாதிக்கப்பட்ட பலஸ்தீனர்களுக்கு அனுதாபம் காட்டுவது போல் ஹமாஸின் தாக்குதலால் பாதிக்கப்பட்ட இஸ்ரேலியர்களுக்கும் அனுதாபம் காட்டுவது ஒரு சராசரி இலங்கையனுக்கு கடினமான விடயமல்ல. இலங்கை அரசாங்கம் ஹமாஸின் தாக்குதலை கண்டிக்க மறுப்பது பொதுமக்களின் அபிப்பிராயம் காரணமாக அல்ல. பொதுமக்களின் அபிப்பிராயம் அதற்கு எதிராக உள்ளது.

சுயமுரண்பாடு, பகுத்தறிவற்ற தன்மை மற்றும் வழக்கமான பிடிவாதம் ஆகியவற்றைத் தவிர, அரசாங்கத்தின் தீர்மானத்தில் எது தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஹமாஸின் தாக்குதலை கண்டித்தால் வளைகுடாவில் இருந்து புலம்பெயர்ந்த தொழிலாளர்கள்மூலம் கிடைக்கும் அந்நியச்செலாவணி பாதிக்கப்படக்கூடும் என அரசாங்கம் எண்ணியிருக்கலாம். காஸாவில் போர் நிறுத்தத்துக்கான உலகளாவிய அழைப்புக்கு எதிராக இலங்கை வாக்களித்திருந்தால் முஸ்லிம் நாடுகளுடனான உறவுகள் பாதிக்கப்பட்டிருக்கலாம். மத்திய கிழக்கில் மிகப்பெரிய புலம்பெயர்ந்த தொழிலாளர்களைக் கொண்ட இந்தியா, தோற்கடிக்கப்பட்ட திருத்தத்துக்கு வாக்களித்தது, பின்னர் போர்நிறுத்தத்துக்கு வாக்களிப்பதில் இருந்து விலகியிருந்தது. பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட ஒரு நாட்டுக்கு பயங்கரவாதம் எங்கு இடம்பெற்றாலும் கண்டிப்பது ஒன்றும் கடினமான விடயமல்ல. பயங்கரவாதத்தை நியாயப்படுத்துவது இலங்கைக்கு தன் சொந்தப் பாதுகாப்பையே பலவீனப்படுத்தும்.

இதேவேளை, இஸ்ரேலின் தாக்குதலில் காஸாவில் 8 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் (இப்போது அதிகம்) இவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் சிறுவர்கள் எனவும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இஸ்ரேலின் நடவடிக்கைகள் போர்க்குற்றங்களே. அத்துடன் மனிதாபிமானத்துக்கு எதிரான நடவடிக்கைகளுமாகவே அமைந்துள்ளன. ஆயினும் இலங்கை உட்பட பயங்கரவாதத்தை பயங்கரவாதம் என வரையறுக்கப் பின்னடித்த நாடுகள் இஸ்ரேலின் நடவடிக்கைகளை பயங்கரவாதம் என கூறுவதற்கான தார்மீக உரிமையை இழந்துவிட்டன.

## பாகம் 2

இராகவன்

இந்தக் கிழமை ஏயெம் ஜெபரத்தினம் மாஸ்ரருக்கு பிடரியில கண்ணுமில்லை ஒரு மண்ணுமில்லையெண்டு பூச்சி கண்டுபிடிச்ச கதையைப் பாப்பம். ஏயெம் ஜெபரத்தினம் மாஸ்ரர் இடக்கை வளமுள்ளவர். அதால கரும்பலகையில கணக்குகளை எழுதேக்குள்ள வலக்கையைக் குறுக்குவளத்தில வைச்சு எழுதிறதிலதான் முக்கியமான இரகசியமிருக்குதுதெண்டு முதல்ல கண்டுபிடிச்சான். பிறகு கொஞ்சங்கூர்ந்து பத்தாப்போல அவர் கரும்பலகையில எழுதேக்குள்ள வலக்கையை அடிக்கடி பாக்கிறது தெரிஞ்சுது. வலக்கையில அப்பிடியென்னத்தைப் பாக்கிறார் எண்டது தெளிவா விளங்கிச்சுது. அதுசரி கரும்பலகையில எழுதேக்குள்ள என்னத்துக்கு மணிக்கூட்டைப் பாக்கிறார்? நேரத்தைப் பாத்து ஏன் எழுதோணும், எண்டெல்லாம் யோசிச்சான்.

அப்பதான் ஒரு சங்கதி அவனுக்கு டக்கெண்டு கிளிக்காச்சு. அவர் மணிக்கூட்டில நேரம் பாக்கேல்ல. மணிக்கூட்டின்ரை கண்ணாடியைத்தான் பாக்கிறார் எண்டது கிளியறாச்சு. எட கண்ணாடியிலதான் வகுப்பில பொடியள் என்ன செய்யிறாங்கள் எண்டதைப் பாக்கிறார். அதில பாத்துப் போட்டுத்தான் எழுதி முடிச்சாப்போல மணிக்கூட்டைக் கழற்றி வைச்சிட்டு பிராக்குப் பாத்த, சேட்டை விட்டவங்களுக்கெல்லாம் மின்னுறார் எண்டதைக் கண்டுபிடிச்சான். இந்தக் கண்டுபிடிப்புக்குப் பிறகு ஏயெம் ஜெபரத்தினம் மாஸ்ரர் பாடமெடுக்கிற வகுப்புப் பொடியளெல்லாம் அவர் கரும்பலகையில கணக்கெழுதத் தொடங்கினவுடனை வலு அலேர்ட்டாயிருந்தாங்கள். அதால அசம்பாவிதங்களேதும் நிகழாமல் தப்ப முடிஞ்சுது.

14

ஏயெம் ஜெபரத்தினம் மாஸ்ரர் ஒரு தலைசிறந்த பட்டிமன்றப் பேச்சாளராகவுமிருந்தார். அந்தக் காலத்தில புகழ்பூத்த பட்டிமன்றப் பேச்சாளர்களாக விளங்கிய பொன்.கணேசன் (முன்னைநாள் விக்னேஸ்வராக் கல்லூரி அதிபர்), மன்னவன் கந்தப்பு (முன்னைநாள் மாணிக்கவாசகர் வித்தியாலய அதிபர்), தெணியான் (க.நடேசு), கருணையோகன் (பேராசிரியர் செ.யோகராசா), கு.ஐ.ச. (குப்பிழான் ஐ. சண்முகன்) ஆகியோர் வரிசையில் ஏயெம் ஜெபரத்தினம் மாஸ்ரரும் இடம்பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் குழுவினரின் பட்டிமன்றங்களுக்கு அந்நாள்களில் பெரிய இரசிகர் கூட்டமே யிருந்தது. ஏயெம் ஜெபரத்தினம் மாஸ்ரர் பட்டிமன்றங்களில் பேசும்போது "தசரதச் சக்கரவர்த்தி" என்று சொல்லாமல் "தயரதச்சக்கரவர்த்தி" என்றுதான் சொல்லுவார். அவர் அப்படிச் சொல்லும்போது சபையே பெரிய கலகலப்பாகிவிடும். இவ்வளவும் சொல்லிவிட்டு ஏயெம் ஜெபரத்தினம் மாஸ்ரரின் தோற்றப் பொலிவை சொல்லாமல் விட்டால் பெரிய குறையெல்லோ, அதை வாறகிழமை சொல்லுறன்.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாய மேற்பார்வையாளர்/ பயிற்சியாளர் தேவை

புத்தளம் நகருக்கு அருகில் 25 ஏக்கர் தோட்டத்தில் பயிற்சியாளராக (Internship) அல்லது மேற்பார் வையாளராக பணிபுரிய பட்டம்பெற்ற, உயர் அல்லது சாதாரண டிப்ளோமா பெற்ற நபர்கள் தேவை. தங்குமிடவதி தரப்படும்.

தொடர்பு : 077 399 9877
rcumaran@gmail.com

## பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

யாழ்ப்பாணம் கைதடி, குருநகர்.
OIC - 1300/-
JSO - 1200/-

தொடர்பு : 075 363 2025

## கடை விற்பனைக்கு

வண்ணார்பண்ணை சிவன் கோயிலுக்கு முன் வீதியில் கடையொன்று விற்பனைக்குண்டு.

077 138 0670

## விளக்கு தே.எண்ணெய் விற்பனைக்கு

கார்த்திகை விளக்கீட்டினை முன்னிட்டு. எங்களிடம் விளக்குத் தே.எண்ணெய் மொத்த விலையில் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

077 171 2336
075 981 7124

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

மானிப்பாயில், உடுவில் பிரதான வீதி முகப்பாக கொண்ட 2 பரப்பு காணியுடன் 80% முற்றுப் பெற்ற வீடு விற்பனைக்குண்டு

077 655 5677

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணத்தில் 4 படுக்கை அறைகள் 2 குளியறை Attach Bathroom. வாகன தரிப்பிட வசதிகளுடன் கூடிய மாபிள் பதிக்கப்பட்ட வீடு 2 வருடங்களுக்கு வாடகைக்கு கொடுக்கப்படும்

076 979 3163, 075 840 0284

## வேலையாள் தேவை

யாழ் நகரில் இயங்கும் வியாபார கடைக்கு **ஆண்** வேலையாள் தேவை. சம்பளம் 30,000/= (Basic) முன்னனுபவம் தேவையில்லை

078 911 3766

## வீட்டுப்பணிப்பெண் தேவை

யாழ். நகரில் தங்கிநின்று வயோதிப பெண்ணொருவரை பராமரிப்பதற்கும் வீட்டு வேலைகள் செய்வதற்கும் பணிப்பெண் ஒருவர் தேவை.

077 616 6454

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை, வீமன்காமத்தில் காணி விற்பனைக்குண்டு.

077 923 9802,
077 729 6999

## வேலைவாய்ப்பு

திருநெல்வேலியிலுள்ள Food cityக்கு, அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் வேலைக்குத் தேவை.

நேர்முகத்தேர்வுக்கு:
0752746679

## தோட்ட வேலையாள் தேவை

புத்தளம் நகருக்கு அருகாமையில் மரக்கறி, தென்னை, மாடுகள் உள்ள தோட்டத்தில் தங்கியிருந்து வேலை செய்ய தனியாகவோ குடும்பத்துடனோ வேலையாள் தேவை. தங்க,சமையல் செய்ய இடவதி தரப்படும்.

தொடர்பு : 077 399 9877

## காணி விற்பனைக்கு

கோப்பாய் இராசவீதிச் சந்திக்கு அருகாமையில் கிருஷ்ணன் கோயில் வீதியில் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 495 5593

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 1998 இல் பிறந்த மணமகனுக்கு மண மகள் தேவை. கார்த்திகை நட்சத்திரம்.A/L படித்து சொந்த தொழில் புரியும் UK வதி விடத்தைக் கொண்ட மணமகள் தேவை.

0757103080
0771129998

## காணி விற்பனைக்கு

ஆனந்தகானம் ஊரெழு பிரதேசத்தில் 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு

077 929 2115

## பாதுகாப்பு உத்தியோகஸ்த்தர் தேவை

யாழ் நகரிற்கு அண்மையில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு பகல் நேர பாதுகாப்பு உத்தியோகஸ்தர் தேவை. **ஊதியமாக ரூ. 40,000உம் இரு வேளை உணவும் வழங்கப்படும்.**

077 278 9032

## விற்பனைக்கு

Mahindra Bolero Maxi Truck
விற்பனைக்கு PS XXXX
விலை - 19 லட்சம் பேசித்தீர்மானிக்கலாம்
076 882 2297, 077 699 2197

## மணமகன் தேவை

1989. யாழிந்து. உத்திராடம் . ICT யாழ்ப்பாணம். மணமகள் பதிவு இல.9882. தரகர்கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே. ஒரு தசாப்தத்துக்கு மேலான சேவை (2012ஆண்டு முதல்)
www.EQMarriageService.com
இணையவழி திருமண சேவை. கொழும்பு - 4.
அழையுங்கள் : 076 664 9401

## மணமகள் தேவை

1991. யாழிந்து. சதயம். Development Officer, யாழ்ப்பாணம். மணமகன் பதிவு இல.9900. தரகர்கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே. ஒரு தசாப்தத்துக்கு மேலான சேவை (2012ஆண்டு முதல்)
www.EQMarriageService.com
இணையவழி திருமண சேவை. கொழும்பு - 4.
அழையுங்கள் : 076 664 9401

## மணமகன் தேவை

யாழ்-இந்து (v) 1997 மகம் லக்கினத்தில் செவ்வாய் குருவுடன் சேர்ந்திருப்பதால் தோசமில்லை கிரக பாவம் 45 உயரம் 4'11" BSc (Hons) Applied Accounting, ACCA Final, MBA reading கொழும்பில் பிரபல தனியார் நிறுவனத்தில் Finance Executive ஆக தொழில் புரியும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை.

077 321 3722

## மணமகள் தேவை

1993. யாழிந்து. ஹஸ்தம். Electronic Engineer, கொழும்பு. மணமகன் பதிவு இல.9930. தரகர்கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே. ஒரு தசாப்தத்துக்கு மேலான சேவை (2012ஆண்டு முதல்)
www.EQMarriageService.com
இணையவழி திருமண சேவை. கொழும்பு - 4.
அழையுங்கள் : 076 664 9401

## காணி விற்பனைக்கு

யாழ் நகர் மணிக்கட்டு

யாழ் நகர் மணிக்கட்டு ஒழுங்கையில் 6 அடிப் பாதையுடன் 1 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு
0778728593

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயு, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிலழ தென்னை, விலும்பி நெல்லி, முருங்கை, பப்பா, டொமினேசி மா, அல்போன்னசா மா, கோப்பி, பட்டரபுறூட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மாங்குஸ்த்தான், ஏலக்கா, சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊரவேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், றெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஜந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: நியூ லங்கா பாம்**
**பலாலி வீதி, ஊரெழு மேற்கு, பிள்ளையார் கோயில் வீதி, கணேசா பாடசாலை அருகில்**
**077 612 9343**

**நியூ லங்கா பாம் கிளை:**
**K.K.S. வீதி, இணுவில்**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த 1989 ஆண்டு பரணி நட்சத்திரம் கிரகபாவம் 22 செவ்வாய் 8 இல் உள்ள நிரந்தரமாக அரச திணைக்களத்தில் பணிபுரியும் (HND IT) மணமகனுக்கு பொருத்தமான **பணிபுரியும் மணமகளை** பெற்றோர் எதிர்பார்க்கின்றனர் **(மணமகள் வடமராட்சிக்கு அண்மையில் வசிப்பவராக இருத்தல் விரும்பத்தக்கது)**

077 864 9878, 077 634 3103

## காணி விற்பனைக்கு

மன்னாரில் உள்ள காணியும், பனிக்கட்டி உற்பத்தி ஆலையும் விற்பனைக்குண்டு. மின்சார வசதி, நன்னீர் ஊற்று, பனிக்கட்டி தொழிற்சாலை செய்வதற்கு உகந்த இடம். விலை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசித்தீர்மானிக்கப்படும்

Whatsapp - 001 204 930 2539

## BI ருமேனியாவில் வேலை வாய்ப்புகள்

RECRUITMENT
LICENCE no : 3507

**கட்டுமானத் துறையில் வேலை வாய்ப்புகள்**
(மேசன், தச்சகர்கள், கம்பி பொருத்துபவர்கள், பிளம்பர்கள்)

- சமையல் உதவியாளர்
- சுத்தம் செய்பவர்கள் (பெண்)
- பைக் ரைடர் (Bike Riders)
- தொழிலாளர்கள் (பொது வேலைகள்)
- கட்டுமான தொழிலாளர்



- சம்பளம் 500 யூரோக்கள் மற்றும் அதற்கு மேல் வழங்கப்படும்
- இடம் - Bucharest - ருமேனியா
- ஐரோப்பிய வாழ்க்கை முறை
- உணவு மற்றும் தங்குமிட வசதி இலவசம்
- மருத்துவ வசதிகள் இலவசம்

தொடர்புகளுக்கு
0112 576 656
0117 794 150
0776 929 773

**BI RECRUITMENT**
இல.250/3/06, 3rd மாடி,
ஆர். ஏ.டி மெல் மாவத்தை, லிபர்ட்டி ப்ளாஸா.
www.birecruits.com

AL/3507/0001/23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 06 . 1992



மறைவு 26 . 10 . 2023

### திருமதி வைஷ்ணவி இளங்கோ

யாழ்ப்பாணம் அல்வாய் வட்டுவத்தையை பிறப்பிடமாகவும், கொழும்பை வாழ்விடமாகவும், ஐக்கிய இராச்சியம் Birmingham இல் வசித்தவருமான திருமதி வைஷ்ணவி இளங்கோ கடந்த மாதம் (26.10.2023) வியாழக்கிழமை மாலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆனந்தகுமார் (Bond Master) மற்றும் குகாம்பிகை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், இளங்கோவின் அன்பு மனைவியும், வைதேகி (Oman), புருஷோத் (UK) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் ஈவா தம்பதிகளின் மருமகளும், சிவகணேசன்-சந்திராதேவி (Sri Lanka), சிவசங்கரன்-ஜெயராணி (Sri Lanka), சிதம்பரநாதன் - அமிர்தகௌரி (Sri Lanka), சுப்ரமணியம், குணநேசன், குணநேசம், விமலா, குணரதனி ஆகியோரின் மருமகளும், முத்துமயில்வாகனம் - அம்பிகை (Germany), தனபாலசிங்கம் - ராதாம்பிகை (Canada), ஸ்ரீநந்தலோஜன்-நவாம்பிகை (Denmark), ஸ்ரீஜெயராமச்சந்திரன் (Canada), நகுலானந்தன் - ஞானாம்பிகை (UK) ஆகியோரின் பெறாமகளும், சிவராகுலன், ராகவி, ரமணீதரன், கேசினி, ஐங்கரன், சிவகணேசன், கோபாலராஜன், அஜந், ஆஷா, நிரோஷன், விவித்தா, சசிகரன், தேவசுவோஜினி ஆகியோரின் மைத்துனியும், மகிந்தன், அபிராமி, ரிஷபி, ரிஷிகர், ஷீவாபி, பிரதிக்கா, மதுஷன், நிருஷன், விஷ்ணுபிரியா, வேல்முருகா, பிரபா-ரன்ஜன், வினித்தா-டோமினிக், ஜனேஷ், கமலன்-சாரு, அனுசிகா, பிரணவன் ஆகியோரின் சகோதரியும், அமீஷா, அமாயா, சாய்னா ஆகியோரின் மாமியும், கே:பிஷா, யாதவ், ஆருஷ், அனுஸ்ரீ ஆகியோரின் சித்தியும், ரோஷேய்ன் துருவனின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-11-2023) ஞாயிற்றுகிழமை காலை 9.00 - 11.00 மணியளவில் லண்டனில் உள்ள Hendon Cemetery & Crematorium, Holders (Hill Rd, London NW7 1NB) நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**இளங்கோ (கணவன்) : + 447 3996 04792**
**புருஷோத் (சகோதரன்): + 447 9606 41315**

**தகவல்:**
**சிவகணேசன்**
**(மாமன்)+947 680 46362**

(CS 52821) N-1

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

மலர்வு 10 . 05 . 1958



உதிர்வு 04 . 11 . 2023

கடந்த 04.11.2023 சனிக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

### அமரர் இந்திரகுமார் செல்வராணி

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (19.11.2023) ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (20.11.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைபாக ஏற்று வருகை தருமாறு**
**அன்புடன் கேட்டுக்கொள்கொள்கின்றோம்**

**"செல்வ இந்திர பிரஸ்தம்"**
**187/8, கில்னர் லேன்,**
**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**

(cs.27010) (N-1)

## நன்றிநவிலல்

தோற்றம் 02 . 07 . 1937



மறைவு 25 . 10 . 2023

### சுப்பிரமணியம் சர்வானந்தன்

(ஓய்வுபெற்ற மாவட்ட மருந்தாளர்)

யாழ். திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் புகையிர வீதி (நெட்டிலிப்பாய்) திருகோணமலை, கொழும்பு ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட எமது தந்தை சு.சர்வானந்தன் அவர்கள் கடந்த 25.10.2023 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி ஞானம்மா தம்பதியரின் மருமகனும் புஸ்பராணியின் அன்புக் கணவரும், சசிகுமார், சசிதரன், சசிகலா (நளினி) ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்றவர்களான இராமநாதன், பரமேஸ்வரி, சச்சிதானந்தன், அத்துவிதானந்தன் ஆகியோரின் சகோதரனும், குலமணி, சுந்தரலிங்கம், பாலசுப்பிரமணியம், தேவாம்பிகை மகாதேவி, சாவித்திரி ஆகியோரின் மைத்துனரும், சந்திரகாந்தி, அருணாச்சலம் ஆகியோரின் மாமனாரும், குமரன், சியாம், முத்துக்கிருஷ்ணா, பிரியங்கா, பிரகாஸ், தர்ஷனா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (26.10.2023) மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்றன.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியும் அனுதாபச் செய்திகளை அனுப்பியும், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியும், தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் எமது துயரில் பங்குபற்றி ஆறுதல் கூறியவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஹம்டன் லேன்,**
**வெள்ளவத்தை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 555 8327**
**077 494 7373**

(CS 27006) N-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 05 . 1940



மறைவு 17 . 11 . 2023

### புவனேஸ்வரி அப்புத்துரை

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் புத்தூர் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட புவனேஸ்வரி அப்புத்துரை நேற்றுமுன்தினம் (17.11.2023) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி முத்தாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அப்புத்துரை அவர்களின் அன்பு மனைவியும், கமலாதேவி, கமலநாதன், சுலோசனா, மல்லிகாதேவி, விஜயலட்சுமி (ஆசிரியை - யா/வண். வைத்தியலிங்கம் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தில்லையம்பலம், புனிதவதி, சண்முகநாதன், கந்தசத்தியதர்சன் (சைவப்புலவர், ஆசிரிய ஆலோசகர்), சர்வானந்தம் ஆகியோரின் அன்பு மாமியாரும், பொன்னுத்துரை, மகேஸ்வரி, கதிரவேலு, ஈஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் இரசம்மா, கதிரவேலு, நடேசன், சின்னத்துரை, காலஞ்சென்ற சின்னமணி ஆகியோரின் மைத்துனியும், பிரசாந்தன், கோகுலதாசன், மதுரிகா, யதுர்ஷன், டினோஜன், விபூசன், அனோஜன், ராதிகா, சிவகாந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சங்கீர்த்தனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2023) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் கிழக்கு அந்திரானை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**புத்தூர் கிழக்கு,**
**புத்தூர், முருகன்திடல்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 27007) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



தோற்றம் 01 07 1974

மறைவு 18 11 2023

### வைத்திலிங்கம் உதயராசா

(பாற்சங்க உரிமையாளர்)

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், மூத்த தம்பி வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் உதயராசா (பாற்சங்க உரிமையாளர்) அவர்கள் நேற்று (18.11.2023) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வைத்திலிங்கம் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், குகனேஸ்வரன் சாந்தகுமாரி தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வலதாவின் பாசமிகு கணவரும், கஜானன், பவதனன், கௌதமி ஆகியோரின் பாசமிகு தந்தையும், றஞ்சினிதேவி, துரைரட்ணம், தேவராசா, யோகராசா (ஆசிரியர்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

(CS 27018) A-1


## SAMUDRA TRADES

**இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள சமுத்திரா ரேடர்ஸ் எனும் நிறுவனத்தில் மா அரைக்கும், மா வறுக்கும், நெல்குத்தும், நீருடன் சேர்த்து அரைக்கும் இயந்திர வகைகள் மற்றும் மரம் சீவும், வெட்டும் இயந்திரங்கள் இவை அனைத்துக்குமான உதிரிப்பாகங்கள், றபர்பட்டி A & B ஸ்குறா பட்டி வகைகள், றபர் றோல் 6",10", மோட்டர், ஸ்ராட்டர் வகைகள் அனைத்தும் விற்பனைக்கு உண்டு.

**077 494 9683, 021 222 2938**

(CS 27021) A-1


## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 17 09 1950

இறப்பு 17 11 2023

### கணேசு முருகையா

(முன்னாள் கிராம சேவையாளர் J/115,
முன்னாள் செயலாளர் சிவகாமி அம்பாள் திருமண மண்டபம்)

புன்னகை பூத்த முகத்தவனே
பூவுலகில் உன் நற்கருமம் நிறைந்ததோ??
புன்னகையொடு உன் மொழியும்....
வார்த்தைகளால் உரைக்கலாமோ????
வார்த்தைகளே இல்லை ஐயா - உமை
வாழவைத்த சிவகாமி அம்பாள் பாதம் தனில்
வாழ்ந்திட தினம் பிரார்த்திப்போம்.

இணுவில் சிவகாமி அம்பாள் திருமண மண்டப
நிர்வாகத்தினர்.

(cs 52557 (N.1)

## நீங்கா நினைவலைகள்

### முதலாம் ஆண்டு



மலர்வு 07 06 1946

உதிர்வு 30 11 2022

### கந்தையா செல்லத்துரை

### 5ஆம் ஆண்டு



மலர்வு 15 10 1978

உதிர்வு 07 11 2018

### செல்லத்துரை மயூதரன்

(சிவசக்தி அரைக்கும் ஆலை, பல்பொருள் வாணிபம் உரிமையாளர்கள்)

திதி: வளர்பிறை ஸப்தமி

குடும்பத்தின் குலதெய்வமாய் - எம்
நலன்களில் பல வரங்களை [illegible]
உ[illegible] - [illegible]
தரமாக்கிய எங்கள் அப்பா[illegible] !! - உங்கள்
ஓராண்டு நினைவில் நாங்கள் இங்கே
உருகி நிற்கின்றோம்.

அல்லும் பகலும் அயராது உழைத்து
அனைவர் அகத்திலும்
அன்பாய் இதயம் புதைத்து மீளாத்துயரில்
எமையெல்லாம் வீழ்த்தி
ஐந்தாண்டுகள் அகன்று போனதையா மயூ!

திதி: அமாவாசை [illegible]

ஆண்டுகள் மறைந்தாலும்
நம் ஆறாத்துயர்கள் ஆறவில்லை
[illegible] போன உங்கள் [illegible]
மனதைவிட்டு மறையவில்லை
ஓய்வெடுக்க இறைவனடி போனீர்கள் என்று
ஒன்றுகூடி உங்கள் இருவரின்
ஆத்மா சாந்திக்காக
இறைவனடி வேண்டி நிற்கின்றோம் !!!.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

[illegible] துயருறும்
குடும்பத்தினர்

(N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org